www.tamilarangam.net

# தமிழீழம்

வெளியீடு : அரசியல் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள்

குரல் 7 ஜனவரி 89





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களத்தில் புலிகள்







www.tamilarangam.net

# புலிகளின் குரல்

## மோசடித் தேர்தல்

தேர்தலொன்றை நடத்தும் சூழ்நிலையில்லாத வேளையில் தமிழீழ மக்களினதும் இயக்கங்களினதும் எதிர்ப்பையும் மீறி தங்களது நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு, இந்திய இலங்கை அரசுகள் ஒரு மோசடித் தேர்தல் நாடகத்தை அரங்கேற்றி முடித்திருக்கின்றன.

நாட்டின் ஏனைய பகுதிகளுக்கான தேர்தலை நடத்திவிட்டு, தமிழ்ப் பகுதிகளுக்கு மட்டும் மாகாண சபைத் தேர்தலை நடத்தாவிட்டால் 'தமிழ்ப் பகுதிகளில் அரசு அதிகாரத்தை இழந்துவிட்டது. நாட்டின் ஒரு பகுதியை தமிழர்களிடம் பறி கொடுத்துவிட்டது' என்று சிங்கள மக்கள் கருதி ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சிக்கு வாக்களிக்காமல் போய்விடுவார்களோ என்று பயந்த ஜெயவர்த்தனா அரசு, வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனது வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாது எப்படியாயினும், கண்துடைப்புக்காகவாவது தேர்தலை நடத்தி முடித்துவிட வேண்டும் என்று செயற்பட்டது.

ராஜீவ் அரசோ, உள்நாட்டில் தனக்கு கிளம்பிய எதிர்ப்புகளை திசை திருப்புவதற்காக இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தலையிட்டு தொடக்கத்திலிருந்தே தான் மேற்கொண்ட தவறான அணுகுமுறையை மூடிமறைப்பதற்கும், அதை நியாயப்படுத்துவதற்கும், தான் ஆட்டுவிக்கின்றபடி ஆடக்கூடிய பொம்மை அரசொன்றை தமிழீழத்தில் ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டது. அந்த பொம்மை அரசின் மூலம் தனக்கு சார்பான அறிக்கைகளை விடவைத்து அதன் மூலம் தமிழக மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தைப்பெற்று தமிழகத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்தி விடலாம் என்ற எண்ணத்தில் ராஜீவ் அரசு செயற்பட்டது.

தமிழீழத்தில் தமிழ் மக்கள் இந்தப் போலித் தேர்தலை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று தமிழீழ மக்கள் தேர்தலில் பங்குபற்றவில்லை. வேட்பு மனு தாக்கல் செய்யக்கூட யாரும் முன்வரவில்லை.

இருந்த போதிலும் ராஜீவ் அரசு மோசடியான முறையில் தேர்தலை நடத்தி முன்னெப்போதுமில்லாத அளவுக்கு மக்கள் தேர்தலில் பங்கு பெற்றிருப்பதாகவும், தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளை நிராகரித்து ஈ.பி.ஆர்.எல்.எப். இனரை வெற்றிபெற வைத்திருப்பதாகவும் வெளி உலகுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், இலங்கையின் உள்விவகார அமைச்சரோ இந்தத் தேர்தல் ஜனநாயகத் தேர்தல் அல்ல என்கிறார்.

வெகுவிரைவில் இந்த மோசடித் தேர்தல் நாடகம் தானாகவே அம்பலத்துக்கு வந்துவிடும்.

## இவன்.....

இவனுடைய பாட்டன்
சிறுவனாய் இருந்தபோது
பட்டாசு வேட்டோசை கேட்டுக்
காதுகளைப் பொத்தினான்......

அவனல்ல இவன்.
இவன்—
புதிய தமிழீழத்தின்
நெருப்புத் தளிர்!

போர் விமானங்கள் போட்ட
குண்டுகளின் வேட்டோசை
இவனுக்குத் தாலாட்டு ஆனது.

வளர்கிறான்......

தாயை நினைக்கும் வயதில்
தாய்மண்ணை நினைந்து......

துப்பாக்கியும் கையுமாய்......
இவன்—
எங்கள் விடுதலைப் போரின்
சங்கிலித் தொடர்!



www.tamilarangam.net

**தோழர் ஒலிவர் தம்போ**
**ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்,**
**த. பெ. இல. 31791**
**லுசாக்கா, சாம்பியா.**

**திகதி. 16-7-88**

**அன்பின் தோழர்,**

சுய நிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட தமிழீழ மக்களும் அவர்களின் முன்னணி இயக்கமாகிய தமிழீழ விடுதலைப் புலிகளும், ஒடுக்கப்பட்ட அசானிய மக்களின் ஒன்றுபட்ட உணர்வுகளின் பிரதிநிதியாகிய வீரத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு தமது மரியாதையை தெரிவித்துக்கொள்கின்றனர். யூலை 18-ல் வரும் அவரின் எழுபதாவது பிறந்த தினத்தில் எமது புரட்சிகர வாழ்த்துக்களை அந்த உயர்ந்த மனிதருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தனது மக்கள் விடுதலை அடையவேண்டும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடனும், அர்ப்பணிப்புடனும் ''உலகத்துக்கு நன்கு அறிமுகமான அரசியல் கைதி'' நெல்சன் மண்டேலா சித்திரவதை தரும் தனது சிறை வாழ்வை நெஞ்சுரத்துடன் தாங்கி வருகிறார். இருபத்திஆறு வருடங்களுக்கு முன்னர், அவரை றோபன்தீவு வெஞ்சிறையில் தள்ளியபோது, அசானியாவின் கறுப்பு மக்களின் விடுதலைக் குரலை நெரித்துவிடலாம் என, சகல ஒடுக்குமுறையாளர்களையும் போலவே பிரிட்டோரிய ஆட்சியாளர்களும் தவறாக எண்ணிக்கொண்டனர். ஆனால் தமது புனிதமான விடுதலைப் போராட்டத்தை ஒருபோதும் நசுக்கிவிட முடியாதென தீரமிகு அசானிய மக்கள் உலகுக்கு எடுத்துக்காட்டி வருகின்றனர்.

மனித குலத்துக்கு எதிரான குற்றவாளிகளாக, உலகத்தின் மனச்சாட்சியின் முன் இன்று தென்னாபிரிக்க இனவாத ஆட்சியாளர்கள் நிறுத்தப்பட்டு உள்ளனர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கறுப்புச் சிறுவர்கள் போதாவின் நரகுழிகளில் சித்திரவதைகளுக்கும், இம்சைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்று அண்மையில் அம்பலப்படுத்தப்பட்ட செய்தியைக் கேட்டு, அமைதியை விரும்பி நீதியைப் பேணிக்காக்கும் மக்கள் திடுக்கிட்டுப் போயுள்ளனர். உலகின் முற்போக்காளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும், அசானிய மக்களின் பின்னே அணிதிரண்டு நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்யக் கோரி உலகளாவிய போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இவ்வேளையில் அசானிய மக்களை நசுக்கும் நோக்குடன் ஹிட்லரின் ''இறுதித் தீர்வு'' போன்ற திட்டமாகிய ''முழுத் திட்டம்'' என்பதை, பிரிட்டோரியாவில் உள்ள காட்டுமிராண்டித் தனமான ஆட்சியாளர்கள் துரிதமாக அமுல்படுத்தி வருகின்றனர் என உலகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அசானிய மக்களின் நியாயபூர்வ சனநாயகப் போராட்டத்தை நசுக்குவதற்கு போதா ஆட்சி கைக்கொள்ளும் இத்தகைய பாசிசத் திட்டத்தை ஒடுக்கப்பட்ட தமிழீழ மக்களின் சார்பில் விடுதலைப் புலிகள் உத்வேகத்துடன் கண்டிக்கின்றனர். மனிதாபிமான மற்ற காட்டுமிராண்டித்தனமான இனவாத ஆட்சிமுறையைத் தகர்ப்பதற்கு அசானிய மக்களும் அவர்களின் நியாயபூர்வ பிரதிநிதிகளாகிய ஆபிரிக்க தேசிய காங்கிரசும் நடாத்தும் போராட்டத்துக்கு எமது ஒருமைப்பாட்டையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஒடுக்கப்பட்ட மக்கள்தான் இறுதியில் வெற்றி பெறுவர்.

புரட்சிகர வாழ்த்துக்களுடன்,
உங்கள் தோழமையுள்ள
**வே. பிரபாகரன்**
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

www.tamilarangam.net

# வாக்குமூலங்கள்

மேஜர்,
இந்திய அமைதிப்படை
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்

ஐயா,

### கோண்டாவில் மேற்குப் பகுதியில் சில இந்திய அமைதிகாக்கும் படையினரின் முறைகெட்ட நடவடிக்கைகள்

அப்பாவிப் பொதுமக்கள் இந்திய அமைதிகாக்கும் படையினரால் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என்று தாங்கள் தந்த உறுதிமொழிக்கு நன்றி. எனினும் சில அமைதிப்படை ஜவான்கள் செய்யும் அக்கிரமங்கள் மேலதிகாரிகளின் கவனத்திற்கு வரவில்லை என்று தோன்றுகிறது மீண்டும் இது நடக்காமல் தடுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் சில சம்பவங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். மறுபடி இது நடக்குமாயின் இப்பகுதி மக்கள் மத்தியில் நற்பெயர் பெற இது உதவாது.

(1) இம்மாதம் 27-ஆம் தேதி காலை 8 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் முத்தாட்டு மடம் (ஜங்ஷன், KKS வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு ஜவான்கள், ஆர். சுகுமாரன் தம்பதியரின் வீட்டிற்குள் பிரவேசித்தனர். கணவனைக் கட்டிவைத்து அடித்தனர். மனைவி எஸ். சற்குணதேவியை பயமுறுத்தி உதவிக் குரலெழுப்பாதபடி செய்து, கற்பழித்தனர். பின்னர் அன்டைவீட்டார் அங்கு சென்று ஆறுதல் கூறினர்.

(2) 26-ஆம் தேதி இப்பகுதியில் வீடுவீடாகச் சோதனை நடைபெற்ற சமயம் காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள் ஜவான்களின் கும்பலொன்று திருமதி ஜி. செல்வநாயகத்தின் வீட்டினுள் நுழைந்து அவரைக் கற்பழித்தது.

இச்சம்பவங்கள் இப்பகுதி மக்கள் மனத்தில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாகச் சிலர் ஊரை விட்டே வெளியேறிவிட்டனர்.

சிங்கள இராணுவத்தின் பிடியில் சிக்கி இப்பகுதி மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயர்களுக்கு, அமைதிப் படையினரின் வருகை ஒரு முடிவு காணும் என்ற நம்பிக்கையில் நாங்கள் உங்களை வரவேற்றோம் ஆனால் அமைதிப் படையினர் வந்த ஐம்பது நாட்களிலேயே முன்னிலும் அதிகத் துயருக்கு ஆளாகி, உற்றாரையும், உடைமைகளையும் பறிகொடுத்துப் பரிதவிக்கின்றனர் எம் மக்கள். கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும், உணவும் சுகாதார வசதியுமின்றி நாள் கணக்கில் வாழ்ந்த நாங்கள் பாதுகாப்பாக வாழும் நம்பிக்கையுடன் வீடு திரும்பினோம். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக அமைதிப் படையினராலேயே இவ்விதமாகக் கொடுமைப்படுத்தப் படுகிறோம். புரிந்துணர்வு கொண்ட மேலதிகாரி என்ற வகையில் தாங்கள் இதுபற்றி தீரவிசாரித்து மீண்டும் நடக்காதபடி தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
கோண்டாவில் பொதுமக்கள்
120 பேர் கையொப்ப
மிட்டுள்ளது.

☆

மேதகு பிரதமமந்திரி,
இந்தியா.
மேதகு ஐயா,

### இந்திய அமைதிப் படையின் வருகைக்குப் பின் உள்ள நிலைமை

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் வாழும் நாங்கள், இந்திய அமைதிப்படையினர் இழைக்கும் கொடுமைகளைத் தங்கள் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறோம்.

(1) கிராம மக்கள் அனைவரும் வீடுகளைக் காலி செய்து கோவில்களுக்குச் செல்லும்படி கூறப்பட்டனர். இதற்கிணங்கி, திரு. சின்னத்துரை மனோகரனும் குப்பிளான் பிள்ளையார் கோவிலுக்கு அகதியாகச் சென்றார். இந்துக் கலாச்சாரத்தை மதிக்காது கோவிலுக்குள் காலணிகளுடன் நுழைந்தனர் சிப்பாய்கள். கண்ணில் பட்ட இளைஞர்களை அடித்து உதைத்தனர். முன் கூறிய சின்னத்தம்பி மனோகரனை ஆதிமூலத்தினுள் போகுமாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறினர். கோவில் மணியை அடிக்குமாறு கூறிவிட்டு அவருடைய காதுக்குள் சுட்டனர். அவர் அங்கேயே இறந்தார். அவர் குற்றமற்றவர், வறியவர், தந்தையற்ற குடும்பத்தைப் பொறுப்பாகக் காப்பாற்றியவர், இதற்குச் சாட்சிகள் உள்ளனர்.

(2) மூத்ததம்பி கனகேஸ்வரியின் வீட்டில் நுழைந்த மூன்று சிப்பாய்கள் அவரை மானபங்கப்படுத்திக் கற்பழித்தனர். மேலும் அவர் வீட்டை சூறையாடினர்.

(3) திரு. நாகமுத்து சரவணையின் வீட்டில் நுழைந்த மூவர் அவருடைய மகள்களைக் கற்பழிக்க முற்பட்டனர். அவர்கள் கூக்குரலிட்டதால் வீட்டைச் சூறையாடிச் சேதப்படுத்தினர்.

(4) காசிப்பிள்ளை தேவசாமியின் வீட்டை அமைதிப்படையினர் சூறையாடினர். சாட்சிகள் உள்ளனர்.

(5) கிராமத்தில் பெரும்பாலான பெண்களை அமைதிப் படையினர் மானபங்கப்படுத்திக் கெடுத்துள்ளனர். இவற்றுக்குச் சாட்சிகள் உண்டு.

(6) திரு. ஆறுமுகமும் அவருடைய மருமகனும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவரும் அப்பாவித் தமிழ் மக்கள். இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அமைதிப்படையினரின் இந்த வன்செயல்களையும் கொலைகளையும் பற்றி விரைவில் விவரமாகத் தகவல் தருகிறோம்.

(7) துர்க்காதேவி கோவிலினுள் இருந்த நூல்கள் படுமோசமாக சேதமாக்கப்பட்டுள்ளன. புத்தகங்களும் மேசை நாற்காலிகளும் எரிக்கப்பட்டுள்ளன.

(8) தேவையெனில் தீக்கிரையான, சேதமடைந்த வீடுகளின் விவரங்கள் தரப்படும்.

(9) கோவில் பூசாரியின் வீடு அமைதிப் படையினரால் தாக்கப்பட்டு சூறையாடப் பட்டது.

(10) வாழை, மிளகாய், திராட்சை முதலான எல்லாப் பயிர்களும் அதிகபட்ச சேதாரத்திற்கு ஆளாகியுள்ளன.

மேற்கூறிய தகவல்கள், இலங்கை அதிபர் இலங்கையிலிருந்து தமிழ் இனத்தை அழித்தொழித்து தமிழரின் பொருளாதாரத்தை சீர்குலைக்க போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதே அமைதிப்படையின் நோக்கம் என்று தெளிவு படுத்துகிறது. எனவே, இக் கொடுமைகளுக்கு ஒரு முடிவு கட்டி எங்களைக் காக்க வேண்டுகிறோம்.

தங்கள் பணிவுள்ள,
**புன்னாலைக்கட்டுவன்**
**பொதுமக்கள்**
62 பேர் கைச்சாத்திட்டுள்ளனர்.

★

# தமிழ்நாட்டில் பிரபாகரன் பிறந்த நாள் விழா

1988 நவம்பர் 26-இல்-தமிழ்நாட்டில் - எல்லா மாவட்டங்களிலும் - தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடைய பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற விழாவில் தளபதி **கி. வீரமணி**, மாவீரன் **பழ. நெடுமாறன்** ஆகியோர் கலந்துகொண்டார்கள். வண்ணாரப்பேட்டையில் நடைபெற்ற மிகப் பெரிய விழாக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் **வை. கோபாலசாமி** கலந்துகொண்டார்.

கோவையில் **கே. இராமகிருஷ்ணன்** தலைமையில் 200 இளைஞர்கள் இரத்ததானம் செய்தார்கள். இங்கு நடைபெற்ற விழாக் கூட்டத்தில் - 'தாய்' ஆசிரியர் **வலம்புரிஜான்** அவர்களும், முன்னாள் சட்டமன்ற அவைத்தலைவர் விருதுநகர் **சீனிவாசன்** அவர்களும் பங்கேற்றார்கள்.

இந்திய மண்ணில் நடைபெற்ற **பிரபாகரன் பிறந்த நாள் விழா** இந்திய அரசுக்கு ஒரு பெரிய அடியாகும். இந்திய இராணுவ வீரர்களை விடுதலைப் புலிகள் சுட்டு வீழத்தும் காலத்தில் - இந்திய மண்ணே விடுதலைப் புலிகள் தலைவருக்கு விழா எடுப்பது இந்திய அரசுக்கு ஒரு பாடமே.

சீனப் போரின்போதோ - பாகிஸ்தான் போர் நடந்த வேளையிலோ - இங்கு மாசேதுங்குக்கும்- ஜாஹ்யா கானுக்கும் பிறந்தநாள் விழா கொண்டாடினார்களா?

**"இந்திய அரசுக்கு ஏன் இந்த அவமானம்?" என்று கேட்கிறார் ஓர் இந்திய தேசாபிமானி.**

## இந்திய அரசுக்கு ஒரு பாடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகத்தின் பார்வையில்

இந்தியப் படை தமிழர்களின் அன்பைப் பெற முயல்கிறது. ஆனால் தமிழர்கள் தாங்கள் பெற்ற கசப்பான அனுபவங்களையும், துன்பங்களையும் அத்தனை எளிதில் மறந்துவிடுவதாய் இல்லை.

இந்தியப் பொறிஇயலாளர்கள் உடைந்த அரசு கட்டிடங்களைச் சீரமைத்து வருகிறார்கள். நகரில் உள்ள பெரிய மருத்துவ மனையில் இந்திய 'நர்சுகள்' பணி ஆற்றுகிறார்கள். போர்க்காலத்தில் அழிந்து போன தொலைபேசிக் கம்பிகளெல்லாம் பொருத்தப்படுகின்றன......இருந்தும் தமிழ் மக்கள் இந்தியப் படையின் கொடுமைகளை மன்னித்துவிட ஆயத்தமாக இல்லை.

'இங்கு இந்தியப்படை வந்த போது சிறீலங்காப் படைக்கு எதிராக அவர்கள் பாய்வார்கள் என்று எதிர்பார்த்தோம் - ஆனால் அவர்களோ எங்கள் பிள்ளைகளைத்தான் சுட்டுக் கொன்றார்கள்'' என்றார் ஒரு தமிழ் வர்த்தகர்.

KUNDA DIXIT
**UTLAND**
(Published in Norway)
21 January 1988

ஒளிமிக்க கண்களைக் கொண்ட அழகான இளைஞரான பிரபாகரன் எதிலிருந்தும் தப்பிவிடும் ஆற்றல்மிக்க தலைவராக உள்ளார். பல தடவைகள் பாதுகாப்புப் படைகளுக்கும், காவல்துறை வீரர்களுக்கும் நடுவில் அவர் இவ்வாறு தப்பியதுண்டு. மணிலாக்கொட்டை வியாபாரி போலவும் - கிருத்துவப் பாதிரியார் போலவும் நடித்து அவர் தழுவி இருக்கிறார்.

ஒரு சிகரட்டை நூறு காலடித் தூரத்தில் வைத்து 'பிஸ்டலால்' சுட்டு வீழ்த்தும் ஆற்றல் அவருக்கு இருக்கிறது. குறிதவறாமல் சுடுவதில் கெட்டிக்காரர்.

கட்டுப்பாடும் ஒழுக்கமும் தான் அவருக்கு முக்கியம். அவர் புகைப்பதில்லை குடிப்பதில்லை. காப்பியை - தேநீரைக்கூடத் தொட்டதில்லை. இந்தத் தூய்மையும் - ஒழுக்கமும் பிரபாகரனின் இயக்க உறுப்பினர்கள் அனைவருக்கும் உரியதே.

சென்னையிலிருந்து தாயகத்துக்கு திரும்பியதும் பிரபாகரன் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். நகரங்களிலும், கிராமங்களிலும் மாறி மாறித் தங்கினார். ஓர் இடத்தில் ஒரு நாளுக்கு மேல் அவர் தங்கியதில்லை. கெரில்லாப் போரையும் - புதிய போர்க் கருவிகளையும் பற்றிய புத்தகங்கள் எப்போதும் அவருக்குப் பக்கத்தில் குவிந்து கிடக்கும்.

MARY ANN WEAVER
'THE NEW YORKER'
March 21 - 1988

'சிறீலங்காவில் இன்னும் 'சிக்கல்' தீரவில்லை' என்பதற்கு இன்று வெளியாகி உள்ள அனைத்துலக மன்னிப்பு மன்றின் (Amnesty International) அறிக்கை சான்று பகருகிறது. பெரிய அளவில் போற்றப்பட்டு இன்று கிழிந்து போய்க் கிடக்கும் கடந்த ஜூலை திங்களின் கொழும்பு - புதுடில்லி உடன்படிக்கையின் விளைவாக - சிறீலங்காவில் முகாமிட்டிருக்கும் இந்தியப் படை தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளில் ஈடுபடுவதாக அனைத்துலக மன்னிப்பு மன்று குற்றம் சாட்டி உள்ளது.

அனைத்துலக மன்னிப்பு மன்றின் பார்வையில் - கிட்டத்தட்ட வியட்நாமில் இருந்த அமெரிக்கர்களைப் போலவும் - மலேயாவில் இருந்த பிரிட்டிஷ் துருப்புக்களைப் போலவும் - எல்லாப் பொதுமக்களையும் கெரில்லாக்களாக எண்ணித் தாக்கும் கொடிய தன்மையையே இந்தியப் படையிலும் காண முடிகிறது. பழிவாங்கும் நோக்கோடு கொலைகள் நிகழ்த்தப்படுகின்றன. கற்பழிப்பு அடிக்கடி நடைபெறுவதாக முறையிடப்பட்டுள்ளது.

MICHAEL FATHERS
THE INDEPENDENT
(Published in London)
June 21, 1988

சிறீலங்கா பிரச்சனையில் இன்றுள்ள சிக்கல் - தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாமல் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியாதிருப்பதுதான். நான் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் சென்றிருந்த போது இந்தியப்படைத் தளபதி பிரிகேடியர் காலோன் இதைத்

# உலகத்தின் பார்வையில்

**MICHAEL FATHERS**
**THE INDEPENDENT**
**(Published in London)**
**June 21, 1988**

**MARY ANN WEAVER**
**THE NEW YORKER**
**March 21 - 1988**

**KUNDA DIXIT**
**UTLAND**
**(Published in Norway)**
**21 January 1988**

www.tamilarangam.net



# விடுதலை உணர்வுகள்

**உணர்வு**

முன்னாள் தமிழ்ப் போலீஸ் காரர்.

ஊர் காங்கேசன்துறை.

ஒரு காலத்தில் காவலராகப் பணியாற்றியதால் ஆங்கிலம் தெரிந்திருக்கிறது.

இந்தியப் படையினர் அவரையே நாடுகிறார்கள்.

மக்களுக்கும் இந்தியப்படைக்கும் இடையில் மொழிபெயர்ப்பு வேலை.

சிரித்துப் பழகும் அவரை இந்தியப்படைக்குப் பிடித்திருக்கிறது.

ஒரு படை அதிகாரி இன்னொரு படை அதிகாரியிடம் இப்படிச் சொன்னதுண்டு,

"He is Very helpful to us"

போலீஸ்காரரைப் பேட்டி காண்பது என்று முடிவு செய்கிறார்கள்.

இந்திய அரசுக்குப் பிரச்சாரமாக இருக்கும்.

தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்கள் ஓர் இந்தியப் படை அதிகாரி - நிருபர் - படை வீரர்கள் போலீஸ்காரர் வீட்டில் குவிகிறார்கள்.

பெரிய எதிர்பார்ப்பு.

காமிராக்கள் முடுக்கிவிடப்படுகின்றன.

கொஞ்சநேரம் பேசி இருந்துவிட்டு ஒருவர் தொடங்குகிறார்.

"இந்தியப் படையின் போரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

முன்னாள் போலீஸ்காரரின் முகம் சிவக்கிறது.

"தேவையற்ற போர்."

"அப்படியானால் விடுதலைப் புலிகளின் சண்டை?"

நியாயமானது."

படைவீரர்கள் பற்களைக் கடிக்கிறார்கள்.

அதிகாரியின் கண்கள் எரிகின்றன. "விடுதலைப் புலி நாய்களை அழிப்போம்!" என்று உறுமுகிறார் அவர்.

போலீஸ்காரர் சொல்லுகிறார் :-

"அவர்கள் மக்களோடு இருக்கிறார்கள்."

ஒரு கொடியவன்தான்......

"மிருகத்தனம்" விளையாடுகிறது.

போலீஸ்காரரை அடித்து இரத்தத்தில் போட்டுவிட்டு முரடர்கள் வெளியேறுகிறார்கள்.

நல்ல காலம்......

போலீஸ்காரர் சாகவில்லை.

எலும்புகள் உடைந்துபோய் இருக்கிறார்.

★

**பாடம்**

வல்வெட்டித்துறை.

பிரபாகரனின் ஊர்.

கடற்கரைக் காற்று பனை மரங்களை உசுப்புகிறது.

நல்ல இரவு.

நெரிசலான ஒழுங்கையால் இரண்டு உருவங்கள் மெள்ள அவள் வீட்டை நெருங்குகின்றன.

'வீர்' என்று ஓர் அலறல்.

ஒருவனின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு விளக்கை அவள் போட்டபோதுதான் தெரிகிறது—

இந்தியப்படை ஆட்கள்.

அடுத்தவன் இன்னொரு பெண்ணைப் பிடிக்கிறான்.

கூச்சல்.

கீழே விழுந்து கத்தியை இருளில் அவள் கவனமாக எடுக்கிறாள்.

அவனுக்கு வெறி.

ஓங்கிக் குத்துகிறாள்.

காலில் கத்தி பாய அவன் ஓடத் தொடங்குகிறான்...

ஊர் கூடுகிறது.

துரத்துகிறார்கள்.

முள்வேலியால் பாய்ந்தபோது அடுத்தவனின் முதுகு கிழிகிறது.

கம்பி வேலி முள்ளில் - அந்த 'மாவீரனு'டைய கிழிந்த சட்டையை மக்கள் காண்கிறார்கள்.

மறுநாள்—

இந்தியப்படை முகாமில் ஊர் முறையீடு.

www.tamilarangam.net



. வெட்கம் கெட்டவர்கள் அடையாளம் காணப்படு கிறார்கள்.

ஒருவனுக்கு கிழிந்த முதுகு.

அடுத்தவனுக்குப் புண்பட்ட கால்.

இப்பொழுதெல்லாம் வல்வெட்டித்துறை மக்கள் 'இந்தியப்படையை' எப்படி அழைக்கிறார்கள் தெரியுமா?

''முள்வேலிச் சட்டைகள்''.

★

**துணை**

கிழவி உறுதியானவள்.

இளவாலைக் கிராமத்தில் தனிச் செல்வாக்கு.

நெடுங்காலப் பனைபோல் எதற்கும் அசையாத முதிர்ச்சி.

பார்க்கிறாள்......

இந்தியப்படை வண்டி ஒன்று வாசலில் வந்து நிற்கிறது.

சிரித்துக்கொள்கிறாள்.

வைராக்கியம் பெருமூச்சாய் அவிழ்கிறது.

'தட தட' என்று கிழவியின் வீட்டுக்குள் துப்பாக்கிகளோடு அவர்கள் பாய்கிறார்கள்.

மணித்துளி அமைதி.

'என்ன மோனே வந்த நீங்கள்?'

இந்தியப்படைக்காரன் ஒருவன் கிழவிக்குப் பக்கத்தில் உறுமிக்கொண்டு வருகிறான்.

'உனக்குத் தெரியும்.'

இந்தியில் சொல்லப்பட்டு - தமிழில் மொழிபெயர்ப்பாகி வருகிறது.

'எனக்கு என்ன மோனே தெரியும்.........நான் என்ன ஜோசியம் சொல்லுறவளே?'

'கிழவி! நீ விடுதலைப் புலிகளுக்கு சோறு போடுறியாம்... உண்மையா?'

'ஐயோ கடவுளே இப்ப அரிசி சரியான விலை ராசா......நீங்க சண்டையைத் தொடங்கி சாமான்களின்ரை விலையெல்லாம் ஏறிப்போட்டுது. நான் புலிகளுக்கு இப்ப சோறு போடுறதில்லை......'

'முதல்ல போட்டநீதானே?'

'முந்தியும் போட்ட நான் - இப்பவும் போடுற நான். எங்களின்ரை பெடியளுக்குக் கறிமட்டுந்தான் இப்ப கொடுக்கிறேன். சோறுபோட முடியுதில்லையே என்று கவலையாக் கிடக்கு.'

ஒருவன் கிழவியைத் தள்ளி விடுகிறான்.

கிழட்டுப்பனை சாய்ந்து நிமிர்கிறது.

'புலிகள் எங்கே?'

'இப்பதான் வந்து கறி வாங்கிக்கொண்டு போனதுகள் எங்க இருக்குதுகள் என்று நீங்களல்லே பார்க்கவேணும்...'

கிழவியை உதைக்கிறார்கள்.

'ஏ கிழவி! உன் வீட்டுக்குப் புலிகள் இனி வந்தா இந்த ஊரே அழிஞ்சு போகும் - தெரிஞ்சுக்கோ.'

கிழவி மீண்டும் சிரிக்கிறாள்.

'இது எங்களின்ரை ஊர் மோனே.'

அவர்கள் அசைந்து போகிறார்கள்.

கிழவியை முடிந்தவரை உதைத்துவிட்டு இந்தியப்படை கிளம்புகிறது.

இடுப்பில் கையை ஊன்றி அவள் திரும்பவும் கிழட்டுப் பனையாய் எழுகிறாள்.

கிழவி இன்று அந்த வீட்டில் இல்லை.

இடம் மாறிவிட்டாளாம்.

சமையலும் தொடர்ந்து நடப்பதாகக் கேள்வி.

★

**தர்மமும் உண்மையும் எமது**
**பக்கம் சார்ந்திருக்கிறது**
**அதுவே எமது பலம்.**

—வே. பிரபாகரன்

www.tamilarangam.net

# உன் மரணம் எம்மில் புது மூச்சாய்...!

**(இந்தியப் படையுடன் நடந்த மோதலில் பெண் விடுதலைப் புலி இமல்டா வீரமரணமடைந்தாள். தமிழீழத்தின் அந்த வீராங்கனைக்கு ஓர் நினைவஞ்சலி.)**

இமல்டா !

ஓ என் இனிய தோழி!


தமிழீழ விடுதலைப் போரில் உதிர்ந்துவிட்ட புனித மலர்களில் ஒன்றாக நீயும் இணைந்துவிட்டாயா? மலரவிருக்கும் தமிழீழம் எப்படியெல்லாம் இருக்கவேண்டுமெனக் கனவு கண்டாய். உன் ஆசையெல்லாம் நிறைவேற முன்னரே உன் கனவுகளிற்குக் கரும்புள்ளி வைத்து உன்னை எம்மிடமிருந்து பிரித்த அந்தப் பாதகர்கள் யார்? எமது இனத்தின் எதிரியான இனவெறி பிடித்த சிங்களக் கைக்கூலி இராணுவத்தினரா? அப்படியானால் கூட எமது மனம் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கும்—களத்தில் எதிரிகளுடன் மோதி நீ கொண்ட இலட்சியத்திற்காக உன்னைத் தியாகம் செய்திருக்கின்றாய் என்று. ஆனால் எமது இரட்சகர்கள் என்ற போர்வையில் எமது மண்ணில் காலடி வைத்தவர்களின் துரோகக் கரங்களினால் உன் கதை முடிக்கப்பட்டுவிட்டது என்பதை எண்ணும்போது என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. உனது இறப்பில் உலகின் நான்காவது பெரிய இராணுவம் என்னதான் திருப்தியைக் கண்டதோ?

என்றும் எமது போராட்டத்திற்காகக் குரல் கொடுக்கும் தமிழகத்தைக் கொண்டது இந்தியா—உலகின் நான்காவது பெரிய இராணுவப் படை கொண்டது இந்தியா—கண்ணியமான வீரர்களைக் கொண்டது இந்தியா என்றெல்லாம் நாம் அறிந்திருந்தோம். கடைசி விஷயம் எமது தவறான கணிப்பீடு என்பதைக் காலம் இப்போது எமக்கு உணர்த்தியிருக்கிறது.

உன் மரணம் ஒன்றை மட்டும் எமக்குப் புலப்படுத்துகின்றது. ''நேர்மையான எதிரியைவிட வஞ்சகமான நண்பர்கள் ஆபத்தானவர்கள்.''

உன் நினைவுகளை என்னால் மறக்க முடியுமா? பொங்கும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு போராளி இறுகிய மனமுடையவளாக இருக்க வேண்டும்: அப்போதுதான் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியை அவள் பெற்றிருப்பாள் என்று சிலர் நம்புகிறார்கள். உண்மையில் மென்மையான இதயத்தைக் கொண்டவர்கள்தான் போராளிகள் எனப்படுவோர். தனது இனத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டும் அதைச் சகித்துக்கொள்ளும் கடினமான மனது இல்லாதவர்களே போராளிகளாகிறார்கள். மென்மையான மனதைக் கொண்டவர்கள் என்பதாலேயே நாம் எல்லாம் போராட்டத்தில் இணைந்து கொண்டோம்.

''பயிற்சியை முடித்துக் கொண்டு செல்லும் எம்மை சமூகம் சாதாரண பெண்களாகப் பார்ப்பது கிடையாது. இப்படியான இழிநிலையைப் போக்கி எமது இலட்சியப் போராட்டத்



பெண் விடுதலைப் புலிகள் பயிற்சி முகாமில் இமல்டா கடினமான பயிற்சிகளைப் பெற்றாள்.

www.tamilarangam.net



தின் பங்காளிகளாகத் தமிழீழப் பெண்கள் அனைவரையுமே மாற்ற வேண்டும். இது படிப் படியாகத்தான் சாத்தியமாகும். ஆனால் எப்படியும் இதை நடைமுறையில் 'நடத்திக் காட்ட வேண்டும்'' என்றெல்லாம் அடிக்கடி கூறுவாயே அதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். உன் கனவுகள் நிஜமாகி வருகையில் நீ......

அகிம்சைப் போராட்டங்கள் மூலம் விடுதலை அடைந்து இன்று அதன் மகத்துவத்தை மறந்திருக்கும் பாரத நாட்டிற்கே அகிம்சைப் போராட்டத்தின் வலிமையை உணர்த்தியிருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த அத்தனை ஊர்வலங்களிலும் மறியல் போராட்டங்களிலும் தமிழீழப் பெண்களின் எழுச்சிமிகு பங்களிப்பைக்கண்டு உலகமே வியக்கிறது. உலகத்திலேயே தண்ணீர்கூட குடிக்காமல் உண்ணா நோன்பிருந்து தியாகியான முதல் பெண் பூபதி கணபதிப்பிள்ளை என்ற தமிழீழப் போராளி தான். அதேபோல் வீரத்திலும் கூட (ஆயுதப் போராட்டத்தில்) நாம் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வரலாறாக்கிவிட்டோம்.

முறத்தால் புலியை விரட்டியவள் தமிழ்ப் பெண் என்று புறநானூறு கூறுகிறது. அது நடந்ததோ என்னவோ - ஆனால் புலியாகவே மாறித் தம்மை எதிர்ப்பவர்களை புறமுதுகு காட்டி ஓடவைத்தவர்கள் தமிழீழப் பெண்கள் என்று புதிய காவியம் படைக்கப்படுகின்றது.

உன்னை நினைக்கையில் எமது நினைவுக்கு வருவது உனது சிரிப்புத்தான். நீ சிரிக்கத் தொடங்கினால் தொடர்ச்சியாகவே சிரிப்பாய். எளிதில் நிறுத்தமாட்டாய். இதற்காகவே ''ஜெனரேற்றர்'' என்று அழைப்போம் உன்னை. அந்த ''ஜெனரேற்றர்''சிரிப்பை பார்க்கவோ கேட்கவோ முடியாத இடத்திற்குப் போய்விட்டாயே நீ.

பள்ளிச் சீருடையுடன் வீட்டிலிருந்து புறப்பட்ட உனது வரலாறு இராணுவச் சீருடையுடன் முடிந்துவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்காளியாகவேண்டும் என்ற ஆவலுடன் யாழ்ப்பாணத்தின் குருநகர்ப் பகுதியில் மத்தியதர குடும்பத்திலிருந்து வந்து இயக்கத்தில் இணைந்து கொண்டவள் நீ. நீயும் நானும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் வீட்டில்தான் முதன்முதலில் அறிமுகமானோம். எங்களைப் போலவே வேறு சில பெண்களும் அங்கே வந்து எம்முடன் இணைந்தனர். விரைவில் பயிற்சிக்காகக் கூட்டிச் செல்லப்படுவோம் என்ற செய்தி எட்டியது. இது எமது மகிழ்ச்சியை அதிகரித்தது.

''பயிற்சி பெற்றுத் தமிழீழத்தில் ஆயுதம் தாங்கிப் போராடப் புறப்பட்ட முதல் பெண் போராளிகளாகத் திகழ்வோம். நாம் தமிழீழத்தை மீட்டெடுத்து எமது வருங்காலச் சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழ வழி சமைப்போம்.'' இப்படியான இனிமையான கனவுகள் உடன் பயிற்சி முகாம் நோக்கிப் புறப்பட்டோம். தமிழீழ விடுதலைக்கான இயக்கமென்று எண்ணிப் பெருமைப்பட்டு நாம் இணைந்த இயக்கத்தின் சகோதரிகள் விடுதலைப் பாதையிலிருந்து விலகியிருக்கின்றார்கள், எமது எதிரியைத் தவறாக இனம் காட்டுகிறார்கள் என்ற உண்மை முகாம்களிற்கு வந்த பின்புதான் எமக்குப் புரிந்தது. ஆம்! நாம் இணைந்துகொண்டது விடுதலைப் புலிகள் அமைப்பில் அல்ல. நமக்குத் தெரியாமலே சமூக விரோதக் கும்பல் ஒன்றில் சேர்ந்துவிட்டோம். பயிற்சி முகாமில் தமது எதிரிகள் விடுதலைப் புலிகள் என்றே எமக்குப் போதித்தார்கள். தமிழீழ விடுதலையைத் தவிர ஏனைய விடயங்களில்தான் கூடிய அக்கறை செலுத்துகிறார்கள் என்ற உண்மை எமக்குத் தெரிய வந்ததும் எமக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் நாங்கள் தமிழீழப் போராட்டத்தின் பங்காளிகளாக வேண்டுமாயின் ஒரு உண்மையான, தெளிவான தலைமையின் கீழ்தான் அணிதிரளவேண்டுமென்பதில் உறுதியாக இருந்தோம். அதனால் அந்த அமைப்பிலிருந்து விலகி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டோம். எமது நிலையை விளக்கினோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருடன் நாம் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம்கிடைத்தது. ஏற்கனவே இடம்பெற்ற போராட்ட அணுகுமுறைகள் சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு சம்பந்தமாகவும் எமக்கிருந்த ஒரு சில சந்தேகங்களைக் கேட்டோம். அவரும் எல்லாவற்றிற்கும் விளக்கமாகப் பதிலளித்தார். ''இந்தப் போராட்டத்தில் நீங்கள் கஷ்டத்தையும் பட்டினியையும் தான் சந்திக்க வேண்டியிருக்கும். பயிற்சிகளோ மிகக் கடுமையாக இருக்கும். ஆனால் இவையெல்லாம் எமது எதிர்காலச் சந்ததியினரின் நலனிற்காகவே என்பதை நாம் உறுதியாக நம்பினால் இவை எல்லாம் ஓர் அற்ப விசயமாகவே இருக்கும். எதற்கும் சிந்தித்து முடிவெடுங்கள். எங்களைப் பொறுத்தவரை விடுதலைக்காகப் புறப்

www.tamilarangam.net




பட்ட எந்தப் போராளியையும் நடுத்தெருவில்விட நாம் தயாரில்லை'' என்று கூறினார். அத்துடன் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் சாதித்த சாதனைகள் என்னென்னவென்பதையும் எடுத்துரைத்தார்.

தலைவருடனான சந்திப்பின் பின் நாம் புது உற்சாகம் மிகுந்தவர்களாகக் காணப்பட்டோம். ''நாளை கூறும் முடிவும் இதுவாகத்தானிருக்கும். அதை இன்றே கூறுகிறோம். எந்த கஷ்டத்தையும் சந்திக்க நாம் தயாராகவே இருக்கின்றோம்'' என்று உறுதியாகக்கூறினோம்.

இதை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமிற்கு அனுப்பப்பட்டோம். பயிற்சி முகாமில்தான் எத்தனை விதமான அனுபவங்கள். அந்த இனிமையான நாட்கள் எமது நினைவில் என்றும் பசுமையானவையே! பயிற்சியின்போது இராணுவ ரீதியாக ஆண்களிற்கு நாங்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தோம். முகாமில் குறும்புச் செய்கைகள் மூலம் நீ இருக்கும் இடத்தையே கலகலப்பாக்கி விடுவாய். முகாமில் எம்மிடையே சின்னச் சின்னப் பிரச்சனைகள் வரும்போது அங்கே சமரசம் செய்வதற்கு நீ தோன்றிவிடுவாய். எமது முகாமிற்குத் தேவையான சாப்பாடு மற்றும் பொருட்கள் எமது முகாம் அமைந்திருந்த ஓர் குறிப்பிட்ட இடத்தை வாகனத்தின் மூலம் வந்தடையும். அங்கிருந்து அவற்றை நாமே சுமந்து செல்லவேண்டும். அப்போது எல்லாம் எமது வேலையில் கடினம் தெரியாமலிருப்பதற்காகவே நீ ''ஜோக்'' அடித்துக்கொண்டே வருவாய். உனது கலகலப்பான போக்கினால் எமது வேலை கடினமானதாகத் தோன்றாது.

ஒருமுறை எம்மால் வெட்டப்பட்ட சுமார் 20 அடி ஆழமுள்ள கிடங்குக்குக் கீழே இருந்த வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட கல்லொன்றை வெளியே எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது மிகவும் பெரியது. பாரமானது. ''இதைத் தூக்க நான் எனது பையன்களை அனுப்புகிறேன்'' என பொன்னம்மான் சொல்லவே ''இது எம்மால் முடியும்'' என நீ பொன்னம்மானிடம் சொன்னாய். ''இல்லை முடியாது. இதற்குப் பையன்கள்தான் சரி'' என பொன்னம்மான் கூறியபோது அவர் எம்மைச் சோதிக்கத்தான் கூறுகிறார் என்று தெரிந்து இதை ஒரு சவாலாகவே ஏற்று நாங்கள் அதை வெளியே கட்டி இழுத்தெடுத்தோம். அப்போது எமக்கு ஏற்பட்ட பூரிப்பு! — ஒரு குழந்தையைப்போல் பொன்னம்மானின் முன்னால் ''எப்படியம்மான் எங்கட வேலை?'' என்று குதூகலித்து ஆர்ப்பரித்தாயே அது இன்றும் என் நினைவில் உள்ளது.

முகாமில் ஒரு கடினமான உழைப்பாளியாய், ஒரு கலகலப்பான போராளியாய், ஒரு சிறந்த நடிகையாய், அருமையான சமையல்காரியாய், குறி தவறாது துப்பாக்கி சுடுவதில் தேர்ச்சிபெற்றவளாய்இப்படிப் பல்வேறு வகையிலும் நீ முதன்மையானவளாய்த் திகழ்ந்தாய். R.P.G. [ராக்கட் லோஞ்சர்] பிரயோகிப்பதற்கு நீயும் நானுமே தெரிவு செய்யப்பட்டோம். இப்படியாக எமது பயிற்சிக்காலம் இனிமையாகக் கழிந்தது. எமது நட்பும் உறுதியாக வளர்ந்தது.



பெண் விடுதலைப் புலிகளின் 'கராத்தே' பயிற்சியில் இமல்டாவும் ஒருத்தியாக ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உனக்கு முன்னரே பயிற்சியை முடித்துக்கொண்டு களத்தில் நின்ற நான் மகிழ்ச்சியுடன் உன்னை வரவேற்றேன். ஆம்! இமல்டா வந்து விட்டாள். எமது முகாம் இனிக் கலகலப்பாகிவிடும் என்ற மகிழ்ச்சியே எல்லோருக்கும்.

ஆனால் நீயும் நானும் பிரிய வேண்டிய கட்டம் வந்தது. ஏனெனில் துரதிருஷ்டவசமாக நான் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது.

ஆனாலும் மன்னாரிலே படையெடுத்து வந்த சிறீலங்கா இராணுவத்தினர் பலரை பலியெடுத்த மாபெரும் தாக்குதலில் உனது திறமையைக் கேள்வியுற்று மகிழ்ச்சியுற்றேன். நான் செய்யவேண்டிய வேலையையும் சேர்த்து இரட்டிப்புத் திறமையைக் காட்டி எதிரிகளைக் கலங்கவைத்தாய். உனது குழுவினரின் தாக்குதலிற்கு ஈடுசெய்ய முடியாத சிங்கள இராணுவம் குண்டு வீச்சு விமானங்கள்மூலம் பாரிய குண்டுகளை வீசிப் பலத்த அழிவை உண்டாக்கி தனது கையாலாகாத்தனத்தைப் புலப்படுத்தியது.

அதன் பின் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இருந்த என்னை நீ வந்து சந்தித்தாய். ''வசந்தி! நீ விரைவில் குணமடைந்து விடுவாய். ராக்கட் லோஞ்சருடன் என் வசந்தியைக் காணும் நாள் கிட்டடியில் தான் உள்ளது. அப்போது தான் எனக்கும் உனக்கும் முறையான போட்டியுள்ளது'' என்றெல்லாம் எனக்கு நம்பிக்கையூட்டுவாய். எங்கெங்கோ பிறந்தோம், எங்கெங்கோ வளர்ந்தோம், தமிழீழப் போராட்டத்தின் பெயரால் இணைந்தோம்.

ஆனால் இன்று ஒரே குடும்பம் போன்று அனைவரும் என்மீது பாசமழை பொழிகிறீர்களே என்று திக்குமுக்காடினேன்.

வடமராட்சியில் சிறீலங்கா இராணுவத்துடன் நிகழ்ந்த தாக்குதலிலும் உனது திறமையைப் பற்றி அனைவரும் என்னிடம் வந்து கூறுவார்கள். புதிதாகப் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டு அதில் பயிற்சியாளர்களில் ஒருவராக நீயும் திகழ்கிறாய் என்றும் செய்தி கிட்டியது.

வந்தது ஓர் ஒப்பந்தம், யாருக்காக இந்த ஒப்பந்தம்? இது எமது நலனிற்காகச் செய்யப்பட்டதல்ல என்பது தெளிவாகவே புரிந்தது எமக்கு. ஆயினும் இந்திய மக்கள் மீது குறிப்பாகத் தமிழக மக்கள் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், அன்பையும் வெளிப்படுத்தும் முகமாக— எமது போராளிகளின் மகத்தான தியாகங்களினாலும், இரத்தத்தாலும் பெறப்பட்ட ஆயுதங்களை இந்தியப் படையிடம் ஒப்படைக்கவேண்டியேற்பட்டது.

சிங்கள இனவாதப் பூதம் இவ்வொப்பந்தத்தை விழுங்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்று தலைவர் தீர்க்கதரிசனத்துடன் கூறினார். காலமும் இதை நிதர்சனமாக்கியது. இந்தியப் படையின் துரோகத்தனமும் அம்பலப்படுத்தப்பட்டது. நாம் மீண்டும் ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

**ஒரு தேசியக் கொடியைப் பறக்கவிடுவதற்காக ஆயிரக் கணக்கான கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடத் தயாரானோம்.**

இந்தியப்படையின் துரோகத்தனத்திற்கு எதிராக நீ ஒவ்வொரு தாக்குதலிலும் முன்னணியில் நின்று போராடினாய் எனக் கேள்விப்பட்டேன். நாம் பலவீனப்பட்டுவிட்டோம் என்று இந்திய அரசு தப்புக் கணக்குப் போடுகிறது. எமது பலமே மக்கள் சக்திதான். தமிழீழத்தை மீட்டெடுக்கும் வரை சந்ததி சந்ததியாக நாம் போராடியே தீருவோம் என்பதைக் காலம் இந்திய அரசுக்கு உணர்த்தும் என்றே எண்ணுகிறேன்.

ஆனாலும் என்னுயிர்த் தோழி! வன்னியில் நடந்த முற்றுகையொன்றில் உன்னை நாம் பறிகொடுத்து விட்டோம் என்ற வரக்கூடாத அந்தச் செய்தி வந்தேவிட்டது. நான் அதிர்ந்து விட்டேன் இனி அந்த ''ஜெனரேற்றர்'' சிரிப்பைக் கேட்கவே முடியாது. உனது குறும்புகளைக் காண முடியாது. உன் நடிப்பை இரசிக்க முடியாது. ஆனால் உனது துப்பாக்கியின் ஓசை மட்டும் நிரந்தரமாக நின்றுவிடவில்லை. அது வேறொருவர் மூலம் முழங்கிக்கொண்டேயுள்ளது. அதிலிருந்து முழங்கும் ஒவ்வொரு வேட்டும் ''மலரும் தமிழீழம்! மலரும் தமிழீழம்!'' என்றே ஒலிக்கிறது.

உனது ஆத்மா எனக்குள் ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. நான் விரைவாகக் குணமாகி வருவதை என்னால் உணர முடிகிறது. இமல்டா! நீ விதைக்கப்பட்டு விட்டாய். இதோ! களத்தை நோக்கி ஆயிரமாயிரம் இமல்டாக்கள்! ஆம் விரைவில் அவர்களில் ஒருத்தியாய் நானும். அதுவரை காத்திருப்பாய் என் தோழி!

—வசந்தி

★★★

www.tamilarangam.net

# விழுப்புண் அடைந்த புலியுடன்....



**தமிழ்நாட்டில் சிகிச்சை பெற்றுவரும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த விடுதலைப் புலி வீரர் ஈஸ்வரன் அவர்கள் "தமிழீழம்" இதழுக்கு அளித்த பேட்டி.**

**கேள்வி-1:** தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்கான அடிப்படைக் காரணங்கள் இருக்க முடியுமா?

**பதில்:-** நான் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இங்குதான் தமிழ் பேசும் மக்கள் ஆரம்ப காலம் தொட்டு மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள். முதலாவதாகத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமாகத் திருமலை மாவட்டத்தில் வசிக்கும் தமிழ் மக்கள் தங்கள் பாரம்பரிய நிலங்களைப் பெருமளவில் இழந்துள்ளார்கள். இரண்டாவதாக அங்கு தொடர்ச்சியாக ஏற்பட்ட இனக் கலவரங்கள் மூலமாகத் தமிழ் பேசும் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. உடைமைகள் சூறையாடப்பட்டன. தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். எமது பூமியில் எமது மக்கள் அனைத்தையும் இழந்து அகதிகளானார்கள். 82, 83-இல் நிகழ்ந்த கலவரங்களின்போது சிறீலங்கா கடற்படையினர் திருமலை நகரத்தையே எரித்தார்கள் ஏராளமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காவல் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலும் கொடூரமான சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டார்கள். இந்தக் கசப்பான நிகழ்வுகள் என்னை வெகுவாகப் பாதித்தன. இதன் விளைவே என்னை முழுமையாகத் தமிழீழ விடுதலைப் போரில் நான் ஈடுபடுத்தியமை ஆகும்.

**கேள்வி-2:** 1983 ஜூலை கலவரத்தின் பின் இயக்கங்கள் பல இருந்தும், நீங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினைத் தேர்வு செய்ததற்கு பிரத்தியேகமான காரணங்கள் ஏதேனும் உண்டா?

**பதில்:-** எல்லா இயக்கங்களின் தொடர்பும் அந்தக் கால கட்டத்தில் எனக்குக் கிடைத்தது. ஆனாலும் என்னை முழுமையாக இணைத்துக்கொள்வதற்கு தமிழீழ விடுதலையில் தெளிவான மிகச் சிறந்த ஒரு இயக்கததையே தேர்வு செய்ய விரும்பினேன். என்னுடைய அன்றையக் கால கட்ட நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒழுங்கான இராணுவக் கட்டமைப்பு, கொள்கையுடைய ஒரு ஆயுதப் போராட்டம் பற்றிய அவர்களுடைய அசையாத நம்பிக்கை, எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியான தலைமை என்பன எனக்கு அவர்கள்மீது பிடிப்பை ஏற்படுத்தியது. ஆகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தினையே தேர்வு செய்து கொள்ள விரும்பினேன்.

**கேள்வி-3:** இயக்கத்தில் சேர்ந்துகொண்டபோது ஏற்பட்ட ஆரம்ப அனுபவங்கள் பற்றி...?

**பதில்:-** 1983 ஜூலைக்குப் பின்னர், அங்கு பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சந்தோசம் மாஸ்ரர் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்பு எனக்குக் கிடைத்தது. இத்தொடர்பினூடாக என்னை இயக்கத்தில் முழுமையாக இணைத்துக் கொண்டேன். இணைத்துக் கொண்ட பின்னர், என்னுடைய வாழ்க்கையிலேயே மறக்கமுடியாத நிகழ்ச்சியாக நான் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த நிகழ்வினைப் பற்றிக் கூறலாம். அவர் பற்றிய பல வதந்திகளையும், பலத்த விமர்சனங்களையும் கேட்டிருந்த எனக்கு அவர் என்னோடு பேசியபோது அவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவராக

மிகச் சிறந்த மனிதராக அவர் காட்சி அளித்தார். தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய தெளிவான, உறுதியான கருத்துக்களை அவர் கொண்டிருந்தமையை என்னால் உணர முடிந்தது. இச்சந்திப்பு போராட்டம் பற்றிய எனது உணர்வுகளைப் பல மடங்காக்கியது. அடுத்த படியாக ஒரு கெரில்லாவுக்குரிய கடுமையான பயிற்சிகள் யாவும் எனக்கு அளிக்கப்பட்டன. அவை அரசியல், இராணுவ நோக்கினூடாக அமைந்திருந்தன.

**கேள்வி-4:** தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தில் ஆரம்பத்தில் உங்களது பங்களிப்புகள் எப்படி அமைந்தன?

**பதில்:-** ஆரம்பத்தில் யாழ் மாவட்டத் தளபதியான கிட்டு அவர்கள் பொறுப்பு வகித்த சமயத்தில் அங்கு அரசியல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டேன். இந்த வேலைகளில், எனக்கு இயல்பாக இருந்த ஓவியத் திறமையையும் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. அன்றையக் கால கட்டங்களில் (நினைவஞ்சலி) தமிழீழ பிரதேசங்களில் உணவு உற்பத்தி, கருத்தடைக்கு எதிரான பிரச்சாரம், கசிப்புத் தடை முதலிய வேலைத்திட்டங்களுக்காக பாரிய அளவில் சுவரொட்டிப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை சம்பந்தமாக சுவரொட்டிகளை வடிவமைப்பதில் எனது ஓவியத் திறமையைப் பயன்படுத்தினேன். அச்சமயம் சிறிது காலம் இயக்கத்தில் ஆரம்பத்தில் சேர்ந்து கொண்ட இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் என்னால் வழங்கப்பட்டது. இக்காலகட்டங்களின்போது அரச படைகள் முகாம்களை விட்டுத் தேடியழிப்பினை மேற்கொள்ளுவதற்காக வெளியேற முற்படும் சமயங்களிலெல்லாம் அவர்களை விரட்டியடிப்பதற்காக போர்புரியும் சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

**கேள்வி-5:** நீங்கள் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இயக்க வேலைகளில் ஈடுபடவில்லையா?

**பதில்:-** நான் யாழ் மாவட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது 1985-இன் நடுப்பகுதியில் திருமலைத் தளபதி சந்தோஷம் மாஸ்ரரினால் திருமலை மாவட்டத்தில் வேலை செய்வதற்காக அழைக்கப்பட்டிருந்தேன். பின்பு நான் கையில் காயம் அடையும் வரையும் திருகோணமலை மாவட்டத்திலேயே வேலை செய்து கொண்டிருந்தேன்.

> **தமிழீழ விடுதலையில் தெளிவான நோக்குடைய மிகச் சிறந்த ஒரு இயக்கத்தையே தேர்வு செய்ய விரும்பினேன். என்னுடைய அன்றையக் காலகட்ட நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒழுங்கான இராணுவக் கட்டமைப்பு, ஆயுதப் போராட்டம் பற்றிய அவர்களுடைய அசையாத நம்பிக்கை, எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியான தலைமை என்பன எனக்கு அவர்கள் மீது பிடிப்பை ஏற்படுத்தியது.**

**கேள்வி-6:** உங்களுக்கு ஆயுதப் போராட்ட களத்தில் ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் ஏதேனும் உண்டா?

**பதில்:-** ஆம் உண்டு. 1985 மார்கழி மாதத்தின்போது திருகோணமலையில் தளபதிகள் சந்தோஷம் மாஸ்ரர், புலேந்தி அம்மான் இல்லாத வேளையில் திருமலை மாவட்டத்தின் தற்காலிக பொறுப்பாளராக நான் நியமிக்கப்பட்டேன். அப்போது நான் பயிற்சி வழங்கப்பட்டுக் கொண்டிருந்த புதிய போராளிகளைக் கொண்டு, இறக்கக்கண்டி பாலத்தினைத் தகர்த்தேன். அச்சமயத்தில் பாலத்தின் மேற்பகுதியில் பலத்த இராணுவக் காவல் போடப்பட்டிருந்தது. பலத்த இராணுவக் காவல் மத்தியிலும் பாலத்தினைத் தகர்த்த சம்பவமானது கெரில்லாப் போர் முறையிலான வெற்றியையும், அதே சமயத்தில் போர்முறைக்குப் புதியவர்களான அப்போராளிகளுக்கு வெடிமருந்தினைச் சிறப்பாகக் கையாளும் செயல்முறைப் பயிற்சியின் வெற்றியினையும் உள்ளடக்கியதாக அமைந்தது. அந்த நிகழ்வு என்னால் மறக்கப்பட முடியாத சம்பவமாகும்.

**கேள்வி-7:** நீங்கள் பங்கு கொண்ட தாக்குதல்கள்?

**பதில்:-** யாழ் போலீஸ் நிலையத் தாக்குதல், பெரியகுள கண்ணிவெடித் தாக்குதல், (இத்தாக்குதலில் 6 இராணுவத்தினர் மரணம் அடைந்தார்கள்), கன்னியா கண்ணிவெடித் தாக்குதல், (12 இராணுவத்தினர் கொலையுண்டனர்.) பன்குள கண்ணிவெடித் தாக்குதல். கும்புறுப்பிட்டியில் ஹெலிகாப்டர் மீதான தாக்குதல், இறக்கக்கண்டி பாலத் தகர்ப்பு, கும்புறுப்பிட்டியில் இராணுவம் மீதான தாக்குதல்கள் என்பவை நான் பங்குகொண்ட தாக்குதல்களில் குறிப்பிட்டுச்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொல்லக்கூடிய தாக்குதல்களாகும். ஏனெனில் இத்தாக்குதல்களின்போது சிங்கள இராணுவமானது எம்மால் பேரிழப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இதைவிடவும் இன்னும் பல தாக்குதல் சம்பவங்களில் நான் கலந்துகொண்டிருக்கிறேன்.

**கேள்வி:-** களத்திலே காயமடைந்து இன்று உங்கள் வலது கையானது முழுமையாக இயங்க முடியாத நிலையில் காணப்படுகிறது. நீங்கள் காயத்துக்குள்ளான இந்தச் சம்பவம் பற்றி உங்களால் விபரிக்க முடியுமா?

**பதில்:** 1986-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து தொடர்ச்சியாக சிறீலங்கா இராணுவமானது எமது முகாம்களைச் சுற்றிவளைத்து நிர்மூலமாக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டது. எமது முகாம்கள் அடர்ந்த காடுகளின் நடுப்பகுதியிலேயே அமைந்திருந்தன. முகாம்களைச் சுற்றிவர கண்ணிவெடிகள், சூழ்ச்சிப் பொறிகள் வெவ்வேறு விதமான வடிவங்களில் அமைக்கப்பட்டு உருமாற்றம் செய்யப்பட்டிருந்தன. 26-4-1887-ஆம் தேதியன்று எமது முகாமிலிருந்து இராணுவ வேவுக்காக மூன்று குழுக்களாக காலையில் எமது சக போராளிகள் புறப்பட்டிருந்தனர். அதில் ஒரு குழுவானது சென்ற இடத்தல் இராணுவத்தினர் ''ரோந்து'' வருவதைக் கண்டு பதுங்கி நின்று நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது. அவ்வேளையில் காட்டின் ஒரு பாதை வழியாக வந்த இராணுவமானது எம்மால் வைக்கப்பட்டிருந்த சூழ்ச்சிப் பொறியில் சிக்கி அவ்விடத்திலேயே 5 இராணுவ வீரர்கள் மாண்டனர். இருவர் படுகாயங்களுக்குள்ளாகி குற்றுயிராகக் கிடந்தனர். மீதி இராணுவத்தினர் திகிலடைந்து சிதறி ஓடினார்கள். பதுங்கி நின்று நோட்டம் பார்த்த குழுவில் ஒருவராகிய சபேசன் ''வர்க்கி டோக்கி'' மூலம் தொடர்ந்து தாக்குதலை நடத்துவதற்கான உதவியைக் கோரினார். உடனே விரைவாக நான் 15 போராளிகளை தாக்குதலுக்கு தயார் படுத்திக்கொண்டேன். எமது குழுவினர் 4-A, K-47, ரக துப்பாக்கி, 2G-3 துப்பாக்கி' 2M-16 ரகதுப்பாக்கி 60-m.m ரக சிறு பீரங்கி மோட்டார், பிறவுணிங் L.M.G. ரக துப்பாக்கிக் கைக்குண்டுகள், பெருமளவு ரவைகள் முதலியவற்றை வைத்திருந்தனர். குழுவினருடன் தாக்குதல் நிகழ்ந்த இடத்தை நோக்கி காட்டின் பின்புறப்பாதை வழியாக வந்து தாக்குதல் நிகழ்ந்த இடத்திலிருந்து சொற்பதூரம் தள்ளிநின்று நிலைமையினை அவதானித்தேன். அச்சமயம் அவ்விடத்தில் இராணுவத்தினர் இருக்கவில்லை. ஆனால் அங்கு இராணுவத்தினர் தாக்குதலுக்குள்ளாகியதற்கான தடயங்கள் தென்பட்டன. எனவே நான், சபேசன், சாந்தன் தவிர்ந்த மீதியானோரை தாக்குதலுக்கு தயாரான நிலைகளை எடுக்குமாறு பணித்துவிட்டு, அவ்விருவருடனும் சூழ்ச்சிப் பொறிவைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்று அவ்விடத்தினைப் பார்வையிட்டோம். அங்கு சிதறுண்டு கிடந்த ரவைகளையும், இராணுவத்தினரால் கைவிடப்பட்ட சில குண்டுகளையும் எடுக்குமாறு என்னுடன் வந்தவர்களுக்குக் கூறிவிட்டு அவ்விடத்தினைச்சுற்றிப்பார்வையிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது எனது கையில் பிஸ்டல் மாத்திரமே இருந்தது. அச்சமயத்தில் சப்பாத்துக்கள் சருகுகளை மிதிப்பதால் ஏற்படும் ஒலி எனக்குக் கேட்கவும், நான் நிலைமையை ஊகித்து அருகிலிருந்த பெரிய மரமொன்றின் பின்னால் ஒளிந்து தாக்குதலுக்கான நிலையை எடுத்துக் கொண்டேன். அதே மரத்தின் எதிர்ப்பக்கமாக இருந்த இராணுவ வீரன் T-56 ரைபில் சகிதம் வெளிப்பட்டான். அவன் வெளிப்பட்டதுதான் தாமதம் நான் உடனடியாக பிஸ்டலால் அவனை நோக்கிச் சுட்டேன். அவன் நிலைதடுமாறிக் கீழே வீழ்ந்தான். வீழ்ந்தவன் மீது மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தேன். அவனது பச்சைநிற இராணுவ உடையில் இரத்தம் தோய்ந்து சில வினாடிகளில் என் வலக்கையானது இரும்பால் பலமாகத் தாக்கப்படுவதான உணர்வை என்னால் உணர முடிந்தது. நீட்டப்பட்டிருந்த என் வலக் கையானது தொள்மூட்டோடு முறிந்து வலக்கையின் உள்ளங்

**தலைவர் பிரபாகரன் பற்றிய பல வதந்திகளையும், பலத்த விமர்சனங்களையும் கேட்டிருந்த எனக்கு அவர் என்னோடு பேசியபோது அவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவராக மிகச் சிறந்த மனிதராக அவர் காட்சி அளித்தார். தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய தெளிவான, உறுதியான கருத்துக்களை அவர் கொண்டிருந்தமையை என்னால் உணர முடிந்தது. இச்சந்திப்பு போராட்டம் பற்றிய எனது உணர்வுகளை மேலும் பன்மடங்காக்கியது.**



**பலத்த இராணுவக் காவல் மத்தியிலும் பாலத்தினைத் தகர்த்த சம்பவமானது கெரில்லாப் போர் முறையிலான வெற்றியையும், அதே சமயத்தில் போர் முனைக்குப் புதியவர்களான அப்போராளிகளுக்கு வெடி மருந்தினைச் சிறப்பாகக் கையாளும் செயல்முறைப் பயிற்சியின் வெற்றியினையும் உள்ளடக்கியதாக அமைந்தது அந்த நிகழ்வு என்னால் மறக்கப்பட முடியாத சம்பவமாகும்.**



கையானது தொடையில் அடித்தது. உடனே நான் இடக்கையினால் வலக்கையைத் தாங்கியபடி அவதானித்த போது சிறிது தூரத்திற்கு அப்பால் எனக்கு எதிரில் மேலும் பல இராணுவத்தினர் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. உடனே நான் இடக்கையினால் வலக்கையைத் தாங்கிய வண்ணம், எமது தோழர்கள் நிலை எடுத்திருந்த திசையை நோக்கிச் சப்தமிட்டபடி ஓடினேன். அப்போது இராணுவமானது எமது திசையை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நிலைமையை உணர்ந்த எமது சக தோழர்கள் எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்தவாறே பின்வாங்கினார்கள். எமக்கு அருகாமையில் காற்றைக் கிழித்தவாறு ரவைகள் சென்றுகொண்டிருந்தன. அச்சமயத்தில் ஓடிக்கொண்டிருந்த சபேசனின் காலை ஒரு ரவை பதம் பார்த்தது. அவன் கீழே வீழ்ந்துவிட்டான். இந்நிகழ்ச்சி அச்சமயத்தில் எங்களில் யாருக்கும் தெரியாதிருந்தது. எமது குழுவினர் யாவரும் இராணுவத்தின் பிடியிலிருந்து தப்பி மீண்டும் ஒன்று சேர்ந்தபோது சபேசனை மாத்திரம் காணவில்லை. காட்டினுள்ளே மீண்டும் சென்று சபேசனைத் தேடுவது இயலாத காரியமாயிருந்தது. ஏனென்றால் 3 நாட்களாக சிங்கள இராணுவத்தினர் காட்டில் மேலும் படைகளைக் குவித்து சல்லடை போட்டவண்ணம் இருந்தனர். அவர்களுடைய தேடுதல் வேட்டை அடங்கிய பின்னர் 3 நாட்களின் பிறகு சபேசனைத் தேடிக் காட்டின் நாலாபுறமும் எமது தோழர்கள் அலைந்தார்கள். அடர்ந்த காட்டின் நடுவே பற்றையொன்றினுள் AK-47 துப்பாக்கியையும், ரவைக்கூடுகள் (மகஸீன்) வைக்கப்பட்டிருந்த நெஞ்சோடு கட்டப்படும் கவசப் பட்டியையும் (சோல்ட் வீரர்) காணக்கூடியதாக இருந்தது. இறக்கப் போகும் தறுவாயிலும் ஆயுதங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் அவன் காட்டியிருந்த அக்கறையை எம்மால் உணரக் கூடியதாக இருந்தது. அவன் வீழ்ந்து கிடந்த தரையின் அருகே சிறுநீர்க் குட்டைகள் காணப்பட்டன. அவன் தாகத்தினால் நீர் குடிப்பதற்காக இறுதி நேரத்தில் சிரமப்பட்டிருக்கிறான் போலும். குட்டைகளின் ஓரத்திலே தமிழீழ விடுதலைக்காகத் தன்னுயிரையே நீத்து மீளாத்துயிலில் அவன் ஆழ்ந்திருந்தான். அவனது இழப்பு எமது விடுதலை உணர்வுகளை இன்னும் அதிகரிக்கவே செய்தது. எமது தாயக மண்ணின் விடிவுக்காக இறுதி வரை போராடுவோம் ★

கூறுகை தேர்ந்து . . . .

"1987 ஜுலையில் இந்திய அரசு கொண்டிருந்த அரசியல்—இராணுவ கணிப்புகள் இரண்டுமே தவறானவை ஆகிவிட்டன.

இந்திய—இலங்கை உடன்படிக்கை குறைபாடுள்ளது என்று இப்போது தெரிகிறது.

சிங்களவர் தமிழர் ஆகிய இருபகுதியினர் மத்தியிலும் இந்தியா செல்வாக்கிழந்துவிட்டது.

ஓராண்டுக்கு முன்பு இருந்ததைவிட மோசமான நிலைமைக்கே 1988 ஜுலையில் இந்தியா தாழ்வாக இறங்கி உள்ளது. தீர்வு எதுவும் வருவதாகவே தெரியவில்லை.. ஆனால் இந்தியாவோ மேலும் மேலும் குழப்பச் சேற்றில் புதைந்துகொண்டே இருக்கிறது."

—THE WEEK (Aug 14—20, 1988)

www.tamilarangam.net



# அப்பா இன்னும் இருக்கின்றார்...

**24-10-87** காலை 10 மணி.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்குக் 'கார்' புறப்படுகிறது.

'செல்'களுக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் நடுவில் ஒரு பயணம்.

சிறீவரதராஜா, மனைவி நிலாம்பிகை, குழந்தைகள் தர்சன், தர்மலா, கிரிஷன், மாமா, மாமி, சகோதரி ரஜனி மற்றும் ஓர் உறவினர் காரை அடைத்தாற்போல் உட்கார்ந்திருக்கிறார்கள்.

நல்லூர்க் கோயிலடியில் இந்தியப் படையின் முதல் தடுப்பு நிலையம் குறுக்கிடுகிறது.

நிற்கிறார்கள்.

காக்கி உடைக்கும்பல் ஒன்று 'காரை' மொய்க்கிறது.

''உங்களை எல்லாம் சுட்டுக் கொல்லவேணும்......We Will Shoot you.''

ஒரு வெறியன் கூச்சலிடுகிறான்.

எல்லோரையும் கீழே இறக்கி-'காரின்' ஒவ்வொரு பகுதியாக உருட்டிப் புரட்டிவிட்டு மற்றொரு இந்தியப் படைக்காரன் அவர்களைப் பார்த்து முரட்டுத்தனமாக உறுமுகிறான் :—

''புலி யாரும் இருக்கிறதா?''

சிறீவரதராஜா பக்கவாட்டில் தலையை அசைக்கிறான். குழந்தைகள் மிரளுகின்றன. மூன்று வயது தர்மலா அம்மாவின் சேலையில் முகத்தைப் புதைக்கிறாள்.

''சரி போ......போ......''

காலையிலேயே முகமெல்லாம் வியர்த்துக்கொட்ட வெலவெலத்துப்போய் ஓட்டுநர் இருக்கையில் உட்காருகிறார்.

'கார்' புறப்படுகிறது.

★

''அப்பா உவங்கள் எதுக்கு எங்களை மிரட்டுறாங்கள்......? சுட்டுப் போடுவாங்களே அப்பா?''

ஆறு வயது தர்சன் அப்பாவைக் கேட்கிறான்.

வெளியே மரங்கள், மின் கம்பங்கள் எல்லாம் ஓடிக் கொண்டிருப்பது கிரிஷனுக்குக் கொள்ளை மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு வயதுக் குழந்தை அவன்.

'கார்'க் கண்ணாடியை இழுத்துவிட்டு-உள்ளே வந்த காற்றை உறிஞ்சி சிறீவரதராஜா பெரிதாக மூச்சு விடுகிறான்.

தலை சுற்றுகிறது.

''நாம எல்லாம் தமிழனாப் பிறந்ததால இப்படி அனுபவிக்கிறம்டா தம்பி......''

சிறீவரதராஜாவின் சொற்களைக் கேட்டு ஓட்டுநர் சிரிக்கிறார். சினத்தின் வெளிப்பாடு.

''உவங்கள்தான் எங்களைக் காப்பாத்த வந்தவங்களே...?'' சிறீவரதராஜாவின் மனைவி நீலாம்பிகை முனகுகிறாள். ''கொஞ்சம்கூட மனுசத்தன்மை இல்லாமப் பாய்ஞ்சு விழுகினம்.''

''அதுதான் தங்கச்சி நினைச்சாச் சரியான கவலையாக் கிடக்குது. சிங்களவன் சுட்டானெண்டால் தாங்கிக் கொள்ளலாம்.....அவன் எங்களை அழிக்கிறதுக்கு என்றே இருக்கிறவன்..... உவங்கள் காப்பாத்த அல்லே வந்தவங்கள். ஊர் ஊராக் கொல்லுகினம்.''

ஓட்டுநர் நீலாம்பிகை சொன்ன கருத்துக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

தூரத்தில் இந்தியப்படை 'ட்றக்' வண்டி வருவது தெரிகிறது.

''உவங்கள் வாறாங்கள்.'' தர்சன் விரலை நீட்டிக் காட்டுகிறான்.

எல்லோரும் அமைதியாகிறார்கள்.

''ஏதும் செய்யமாட்டினமே?''

மாமிக்கு நடுக்கம் பிடிக்கிறது.

''காருல வெள்ளைக் கொடி கிடக்குது அம்மா...பயமில்லாம இருங்கோ......''

ஓட்டுநர் தெம்பூட்டுகிறார்.

பாம்பு ஒன்று மின்னல்வேகத்தில் பக்கத்தாலேயே சீறிக் கொண்டு பாய்வது போல

www.tamilarangam.net



'ட்றக்' வண்டி நொடியில் 'காரை'க் கடந்து மறைகிறது.

சிறீவரதராஜா பழையபடி காரின் ஜன்னல் வழியாகக் காற்றை உறிஞ்சி மூச்சு வாங்குகிறான்.

''நம்முடைய தெருவில நாமே நடமாட முடியாத நம்முடைய நாடு.''

வயிற்றெரிச்சல் அவன் வாயிலிருந்து சொற்களாய் விழ ஓட்டுநர் மீண்டும் சிரிக்கிறார் அதே சினத்தின் வெளிப்பாடு.

★

லண்டனில் வாழ்ந்தவர்கள் அவர்கள்.

மகாராணி எலிசபெத்தின் மண்ணாக இருந்தாலும் தாயகம் ஆகிவிடுமா? என்ன? லண்டனில் தமிழீழம் பற்றிய கூட்டங்கள் நடக்கும் போதெல்லாம் மண்டபத்தின் முன்வரிசையில் சிறீவரதராஜா தாகத்தோடு உட்கார்ந்திருப்பான்.

யாழ்ப்பாணம் அவன் எண்ணங்களில் - கனவுகளில் எப்போதுமே நிறைந்திருந்தது.

சின்ன வயதில் விளையாடி மகிழ்ந்த செம்பாட்டை மண் - கூட்டமாக நிற்கும் பனை மரங்கள் - குடாநாட்டுக்கு வெளியே தொடங்கும் அடர்ந்த பச்சைக் காடு - இரண்டு இரண்டாகப் 'புல்தரையில் மேயும் மைனாக்கள் - கோயிலடியில் பனங்கிழங்கு விற்கும் கிழவி- பழைய காலத்து ஏ-40 'கார்'கள் - தவில் வித்துவான்களின் இனிய மேளக்கச்சேரி — உயிரான தமிழீழம்!

''அப்பாவுக்கு உடல் நலம் இல்லை-நோய் கடுமையாக இருக்கிறது.''

ஊரில் இருந்து வந்த தந்தியைப் படித்தபோது சிறீவரதராஜா உடைந்து போனான்.

அப்பா கண்முன் அப்படியே தோன்றினார்......

நீளவிழிகளும் அடக்கமான சிரிப்பும் தோளில் சால்வையும் கைத்தடியும்......

அப்பா......அவனுடைய அன்பான அப்பா......அப்பா சாகுமுன் அவரை ஒரு முறை பார்த்துவிட வேண்டும்,....

''நீலா, அப்பா என்னை நினைக்காம இருக்கமாட்டார்-தெரியுமே?''

கண் கலங்க மனைவி நீலாம்பிகையிடம் சொன்ன சிறீவாதராஜா அடுத்த மணித்துளியே தர்மலாவைத் தூக்கி மார்போடு அணைத்தபடி தளதளத்த குரலில் சொன்னான்:-

'மகளே.... நாம அப்பப்பாவைப் பார்க்கப் போறம்.''

''மெய்யே அப்பா...உண்மையாகத்தான் சொல்லுறீங்களே......?''

தர்சனுக்கு ஒரே கொண்டாட்டம்- அப்பப்பாவின் நோயைப்பற்றி ஒன்றும் பெரிதாகக் கவலைப்படத் தெரியாத வயது. அவன் கூத்தாடத் தொடங்கிவிட்டான்.

தங்கை தர்மலாவிடம் இரண்டு நாட்கள் தர்சன் கதை கதையாகக் கூறிக்கொண்டே இருந்தான்.

''யாழ்ப்பாணத்துக்கு 'பிளைட்டில' போறதாம்...... பேந்து அப்பப்பா 'சொக்லேட்' வாங்கித் தருவாராம்.....பேந்து விக்கிச் சித்தப்பா கடற்கரைக்குக் கூட்டிற்றுப் போவாராம்......''

தர்மலா வானத்தில் மிதந்தாள்.

ஏற்பாடுகள் முடிந்து விமானம் புறப்படும் நாள் வந்தபோது எல்லோரும் 'ஹித்றூ' விமான நிலையத்துக்கு வந்தார்கள்.

தர்சனின் மகிழ்ச்சி எல்லை தாண்டி இருந்தது.

விமானம் புறப்படுமுன்பு லண்டன் நகரை நோக்கி கைகளை அசைத்து அவன் கூறினான்.

''குட்பை டு லண்டன் ''

★

சிறீவரதராஜா 5-10-87-இல் கொழும்பு வந்து இறங்கிய போதே தமிழீழத்தில் இரத்த மழைக்கான முகில்கள் குவியத் தொடங்கிவிட்டன.

விடுதலைப் புலிகளின் மாபெரும் தளபதிகள் குமரப்பா புலேந்திரன் உட்பட 12 விடுதலைப் புலிகள் பலாலி படை முகாமில் 'சயனைட்' அருந்தி உயிரிழந்த சேதி கொழும்பில் காட்டுத் தீயாகப் பரவிக் கொண்டிருந்தது.

எங்கும் பதட்டம்.

உணர்ச்சி வசப்பட்ட தமிழர்கள் அடுத்த ஓரிரு நாட்கள் கிழக்கில் சிங்களவர்களைப் பெருமளவில் கொன்று குவிப்பதாகக் கொழும்பில் பரபரப்போடு பேசப்பட்டது. சிங்களவர்களின் அந்த நகரில் வீடுகளை விட்டுத் தமிழர்கள் வெளியில் இறங்கவில்லை.

தெருக்களில் 'பறதமிலோ' முழக்கங்கள் கேட்பதாகவும் - தமிழர்கள் ஓரிரு இடங்களில் தாக்கப்பட்டதாகவும் சேதிகள் அடிபட்டன.

வாடகைக் கார் ஒன்றை வைத்துக்கொண்டு சிறீவரதராஜா கொழும்பை விட்டுப் புறப்பட்டு உடனடியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான்.

''அப்பா சாகுமுன் அவரை ஒரு முறை பார்த்துவிட வேண்டும்......''

★

இந்தியப் படை தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பது என்ற முடிவோடு அக்டோபர் 9-ஆம் தேதி தாக்குதலைத் தொடங்கிற்று.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் நாலு திசைகளையும் பாரதப்படையின் 'செல்'கள் நொறுக்கிக் கொட்டின.

எங்கும் பிணவாடை-இரத்த வெள்ளம் - மனித அவதிகள் - கண்ணீர் ......

துப்பாக்கி வேட்டோசை கேட்டபோதெல்லாம் காக்கைகள் வானத்தில் எழுந்து கூச்சலிட்டன.

யாழ்ப்பாணத்தில் மருத்துவமனைகள் நிரம்பி வழிந்த நாட்கள் அவை.

சிறீவரதராஜா தனியார் மருத்துவமனை ஒன்றில் இருந்த அப்பாவைக் குடும்பத்தோடு போய்ப் பார்த்தான்.

அப்பாவின் கண்களில் வெள்ளம் பொங்கிற்று.

''சாகிறதுக்கு முன்னாலை.... உன்னைப் பார்க்க முடியுமோ இல்லையோ என்று கவலையாக இருந்துது மோனே......வந்து சேர்ந்துட்டாயே......''

www.tamilarangam.net



குழந்தை போல் விம்மி அழத் தொடங்கினார் அப்பா.

தர்சன் கட்டிலில் உட்கார்ந்து அப்பப்பாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆசுபத்திரியிலை எத்தனை இளசுகள் காயத்தோடயும் - இரத்தத்தோடயும் வருகுதுகள் தெரியுமே? இந்தியப் படை இப்படி நடக்கும் என்று யார் நினைச்சது?''

முனகி முனகி அப்பா மூச்சு விட்டார்.

சிறீவரதராஜா அப்பாவைத் தேற்றினான்.

''உதையெல்லாம் பற்றி யோசியாதேயுங்கோ அப்பா - புலிகள் விடமாட்டினம்.''

அப்பாவுக்கு நோய்ப் படுக்கையில் கவலை எதுவும் இருக்கக் கூடாது என்பதுதான் சிறீவரதராஜாவின் கவலை.

யாழ்ப்பாணத்தில் - தம்பி விக்கினேஸ்வரன் வீட்டில் தங்கி ஒவ்வொரு நாளும் அப்பாவைப் போய்ப் பார்த்தான் அவன்.

★

தர்சனும் தர்மலாவும் இரண்டு வாரங்கள் விக்கிச் சித்தப்பா வீட்டில் படாதபாடு பட்டார்கள்.

சிறிய பந்துகளை எடுத்துக் கூடையில் போட்டு ''ஆசுபத்திரியில இருக்கிற அப்பப்பாவுக்குத் தோடம்பழம் கொண்டு போறதாம்'' என்று ஒரு விளையாட்டு.

தர்சன் முன் மண், ,த்தில் கிடந்த நீள நாற்காலியில் படுத்திருந்தான். தர்மலா பென்சிலை எடுத்து அவன் கையில் ஊசி போடுவது போலக் குத்தினாள்.

''நீதான் அப்பப்பாவாம்...... நான்தான் டாக்டராம்......''

தலைவாரிக் கொண்டிருந்த நீலாம்பிகை பிள்ளைகளைப் பார்த்து ''என்ன இதெல்லாம்?'' என்று கேட்டாள்.

''மருந்து குடுக்காட்டி அப்பப்பா செத்துப் போயிடுவார் - இல்லையா அம்மா?'' என்றான் தர்சன்.

திடீரென்று பக்கத்தில் கேட்பது போல இந்தியப் படை 'செல்' எங்கோ அதிர்ந்து வெடித்தது.

''மருந்து குடுத்தும் காப்பாத்த முடியாம எத்தனையோ உயிர்கள் செத்துக்கொண்டிருக்குதடா தம்பி'' என்றான் சிறீவரதராஜா.

குழந்தைகளுக்குப் புரியவில்லை.

இரண்டு வாரங்கள் இப்படித் தான்......


புரிந்தும் புரியாததுமான பேச்சுக்கள்......நிகழ்வுகள்...... வீட்டில் மட்டுமல்ல - வெளியிலுந்தான்........இந்தியப் படை ஏன் தமிழர்களைக் கொல்கிறது? எவருக்கும் புரியவல்லை.

சிறீவரதராஜாவுக்கு மட்டும் ஒரு பெரிய மன அமைதி.

அப்பா சாகுமுன் ஒரு முறை அவரைப் பார்த்துவிட வேண்டும் என்று ஒரு தவிப்பு இருந்ததே - பார்த்தாயிற்று.

24-ஆம் தேதி காலை வழக்கம் போல் அப்பாவை அவன் மீண்டும் பார்த்தான்.

அப்பா உடல்நிலை தேறி கலகலப்பாகவே இருந்தார்.



சிறீவரதராஜா பூரித்துப் போனான்.

தர்சன் பையில் கொண்டு வந்திருந்த பழங்களை வாங்கிக் கொண்டு ''பழமா? பந்தா?'' என்று கேட்டார் அப்பப்பா.

எல்லோரும் சிரித்தார்கள்.

''ஒரு வாரம் கிளிநொச்சியில் தங்கிவிட்டு வாறன் அப்பா'' என்றான் சிறீவரதராஜா.

பயணம் தொடங்கிற்று.

www.tamilarangam.net



மருத்துவ்மனைக்கு வெளியே வந்து காரில் ஏறியபோதே 'செல்'களின் வேட்டோசை காதைப் பிளந்து எடுத்தது.

விமானங்கள் உறுமி இரைந்தன.

அப்பாவோடு பேசிய மகிழ்ச்சி தீர்ந்து போயிற்று.

கொடுமையான பயணம்......

★

யாழ்ப்பாண வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. ஓட்டுநர் யாழ்ப்பாணத்தின் நிலையை எண்ணிப் பெருமூச்சு விடுகிறார்.

"'றோட்டு'க்கூடச் செத்துப் போய்க் கிடக்குது......"

வானத்தில் மாரிகால முகிலின் இருள்...ஓரிரு மழைத்துளிகள்.

தெருவுக்குக் குறுக்கே நீளமாகப் படுத்துக் கிடந்த மாடுகள் எழுந்து நகர்கின்றன,

பொதுமக்கள் ஆசையோடு தெருவோரத்தில் நிறுத்தி வைத்த விடுதலைப் புலிகள் தளபதி லெப். கர்ணல் பொன்னம்மானின் ஓவியத் தட்டி இந்தியப்படைத் துப்பாக்கிகளால் சுட்டுக் கிழிக்கப்பட்டு நொருங்கிக் கிடக்கிறது.

"விடுதலைப் புலிகளின்ர படத்துக்குக்கூட உவை பயப்படுகினம்."

சிறீவரதராஜா மனக்குமுறலைக் கொட்டுகிறான்.

"பொன்னம்மானுடைய படத்தை உடைக்கிறதால உந்த வீரனுடைய புகழை அழிக்கமுடியுமே?" என்கிறார் ஓட்டுநர்.

கார் பள்ளத்தில் விழுந்து தளம்பி நகர்கிறது.

"உது ஒரு விடுதலைப் போராட்டம் பாருங்கோ- [illegible]ப்படை என்ன--உலகத்[illegible]ருக்கிற எந்த வல்லரசின்ர [illegible] வந்தாலும் தமிழீழ மக்களின்ர போராட்டத்தை ஒடுக்க முடியாது. உண்மையிலேயே உவை படங்களோடுதான் போராடுகினம்."

சிறீவரதராஜா உறுமுகிறான்.

"பேசாதீங்கோப்பா.......உங்கின அவை நிற்கிறமாதிரித் தெரியுது......"

நீலாம்பிகை பதட்டமடைகிறாள்.

கோயில் வீதியும் ஆடிய பாதம் வீதியும் கூடும் சந்தியில் ஒரு கும்பல்-நல்லூர்க் கோயிலடிக் கும்பலைப் போலவே துப்பாக்கிகளோடு—

'காரை'த் தடுத்து நிறுத்துகிறார்கள்.

இந்தியப்படை வெறியன் ஒருவன் துப்பாக்கியை நீட்டிக் கொண்டே 'காரை' நோக்கிப் பாய்கிறான்.

"அப்பா...உவங்கள் சுட்டுப் போடுவாங்களே......?"

நடுங்கிக்கொண்டே தர்சன் அப்பாவைக் கேட்கிறான்.

குழந்தைகளின் முகங்களை மாறி மாறிப் பார்த்துவிட்டு 'ஓ!' என்று வாய் கிழியச் சிரிக்கிறான் ஒரு நீள மீசை அதிகாரி.

"சரி நீங்க போகலாம்......"

ஓட்டுநர் முகத்தில் வடிந்த வியர்வையை வழித்துவிட்டுக் 'காரை' எடுக்கிறார்.

கார் நூறு யார் போக வில்லை......

'டுமீல் டுமீல்' என்று துப்பாக்கிகளின் கொடிய உறுமல்.

"அம்மா......ஐயோ......"

கார் ஆடி அசைந்து சாய்கிறது.

தொடர்ந்து துப்பாக்கிகளின் வெறிமுழக்கம்.

குருதி பாய நிலத்தில் விழுந்த ஓட்டுநர் அரைகுறைக் காயங்களோடு எதிரே இருந்த சந்து வழியாக ஓடித் தப்புகிறார்.

"போகச் சொல்லிப்போட்டுச் சுடுகிறான்களே சண்டாளனுகள்......"

ஓட்டுநரின் கதறல் கேட்கிறது

இன்னொரு 'வீர்' என்ற சின்னஞ்சிறிய பிஞ்சு அழுகுரல் ......'காரின்' உள்ளே.....காயங்களோடு.

அதுதான் சிறீவரதராஜாவின் கடைசிக் குழந்தை கிரிஷன்.

மற்றவர்கள்......?

கதை முடிந்துவிட்டது.

□

## "திருப்திப்படுத்தல்" விளக்கம் திரும்ப ஒலிக்கிறது!

"தென்னிலங்கையில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளையும், பௌத்த குருமாரையும் திருப்திப்படுத்தவே மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு கிராம சபைக்குள்ள அதிகாரம்கூடக் கிடையாது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறியிருக்கிறார். இதைப் புரிந்துகொள்ளாத தம்பிமார் சிலர் ஜே. ஆர். கூறியதை உண்மையென்று நம்பிவிட்டார்கள்."

[கோண்டாவில்லில் வன்னியசிங்கம் நினைவுக் கூட்டத்தில் மு. சிவசிதம்பரம் 28-9-80 சுதந்திரன்]

"வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புப்பற்றி இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா அறிவித்துள்ளது நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது. ஆனால் அது நிரந்தரமானது அல்ல என்று அவர் கூறியுள்ளது லலித் அத்துலத் முதலி போன்ற சிங்களத் தலைவர் களைத் திருப்தி செய்வதற்காகத்தான்............"

*[திரு. அமிர்தலிங்கம் பேட்டி — தினமணி 4-7-88]*

www.tamilarangam.net

# களத்தில்

## 11 இந்தியப் படையினர் பலி

30-06-88: முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்புக்கும் ஒதியமலை என்ற இடத்திற்கும் இடையில் எமது கெரில்லா அணியினருக்கும், இந்திய இராணுவத்திற்கும் ஏற்பட்ட சண்டையில் 6 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு S.L.R. ரக துப்பாக்கி எம்மால் கைப் பற்றப்பட்டது.

புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் கால் நடையாக வந்து கொண்டிருந்த இந்திய இராணுவத் தொலைத் தொடர்பு அதிகாரி ஒருவர் எமது தாக்குதலில் கொல்லப் பட்டார்.

திருகோணமலை மாவட்டம், திரியாய் என்ற இடத்திற்கும், புடவைக்கட்டு என்ற இடத்திற்கும் இடையில் எம்மால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கி இந்தியப் படையினர் 4 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை ஏனைய இராணுவத்தினர் அந்த இடத்திலேயே எரித்துவிட்டுச் சென்றனர்.

## "சப்பல்" வீரமரணம்

30-06-88: வடமராட்சி திக்கம் என்ற இடத்தில் எமது வீரர் சப்பல் இந்திய "பரா" அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டார். தப்ப முடியாத நிலையில் தன்னிடமிருந்த கைக்குண்டை இந்தியப் படையினர் மீது வீசியெறிந்த சப்பல் சைனைட் அருந்தி வீரமரணமடைந்தார். சப்பலின் கைக் குண்டு வீச்சில் இரு இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். தமிழீழ விடுதலைக்காக தன்னுயிரை நீத்த வீரன் சப்பலிற்கு வடமராட்சி மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள். இதனால் ஆத்திரமடைந்த இந்தியப் படையினர் பருத்தித்துறை, திக்கம், வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்து பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டார்கள்.

## அப்பாவிகள் படுகொலை

01-07-88: வவுனியா மாவட்டம், புளியாலங்குளம், நெலுக்குளம், பாரதிபுரம், இராசேந்திரன்குளம், செக்கடிப்புலவு, இயங்கராவூர், மணியன்குளம், பாவற்குளம் 4-ம், 5-ம், 6-ம் யூனிட் போன்ற பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய இந்தியப் படையினர் பாலா, தருமு என்ற இரு அப்பாவிப் பொது மக்களை சுட்டுக் கொன்றனர். மேலும், அப்பாவித் தமிழ் மக்களை அடித்துத் துன்புறுத்தினர். இதனால் 480 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக வவுனியா நகருக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

## கண்ணிவெடி: 5 இராணுவத்தினர் பலி

02-07-88: யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பளைக்கும், எழுதுமட்டுவாளிற்கும் இடையில் இன அழிப்பிற்காக வந்து கொண்டிருந்த இந்தியப் படையினரின் ட்ரக், ஜீப் ஆகியவற்றின் மீது எமது கெரில்லா அணியினர் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டார்கள். ஜீப் முற்றாகச் சேதமடைந்தது. அதில் வந்துகொண்டிருந்த 5 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

## பெண் புலி மரியா வீரமரணம். 17 இந்தியப் படையினர் பலி

03-07-88: முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடுவுக்கும், II-ம் கட்டை என்ற இடத்திற்கும் இடையில், இன அழிப்பிற்காக வந்த இந்தியப் படையினருக்கும், எமது கெரில்லா அணியினருக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான மோதலில் 9 இந்திய இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். S.L.R. ரகத் துப்பாக்கி ஒன்று எம்மால் கைப் பற்றப்பட்டது. இந்த நேரடி மோதலில் எமது தரப்பில் மரியா என்ற பெண் போராளி வீரமரணம் அடைந்தார்.

இந்த மோதலினால் ஆத்திரமடைந்த இந்தியப் படையினர் 3 அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். 15-க்கும் மேற்பட்ட வீடுகளை எரித்து நாசப்படுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீர்முறிப்பு என்ற இடத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இந்தியப் படையினருக்கும், எமது கெரில்லா அணியினருக்கும் இடையில் ஏற்பட்ட பலத்த சண்டையின்போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



8 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து 3 எஸ். எம். ஜி. ரகத் துப்பாக்கிகள் எம்மால் கைப்பற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து தண்ணீர்முறிப்பு, ஆண்டான்குளம், தகரவாடி, குமுளமுனை போன்ற பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது கண்மூடித்தனமான ''ஷெல்'' தாக்குதல், பீரங்கித் தாக்குதல், வானிலிருந்து ஹெலிகாப்டர் தாக்குதல் நிகழ்ந்தன. விமான மூலமாக 250 கிலோ எடையுள்ள குண்டுகளை வீசி பயங்கரத் தாக்குதல்களை மேற்கொண்டனர் இந்தியப் படையினர். இதனால் திருமதி ஆறுமுகமும், அவரது கைக் குழந்தையும் உட்பட பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## 7 இராணுவத்தினர் பலி பொதுமக்கள் மீது மிருகத்தாக்குதல்

05-07-88: திருகோணமலை மாவட்டம், பொத்துக்குளம் காட்டுப் பகுதியில் எமது கெரில்லா வீரர்கள் வைத்த மிதிக் கண்ணிவெடியில் சிக்கி 7 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குடுமிமலை, புலிபாய்ந்தகல், மியான்குளம், வடமுனை, அலியாஓடை, ஈருலைக் குளம் புழுட்டுமான் ஓடை போன்ற பொதுமக்கள் வாழும் குடியிருப்புகள் மீது இந்திய இராணுவத்தினர் தொடர்ச்சியாக ''ஷெல்'' தாக்குதல் மேற்கொள்வதால் அப்பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள், சந்தைகள், பாடசாலைகள் பலத்த சேதத்திற்குள்ளாயின. அக்கிராமங்களில் உள்ள மக்கள் அகதிகளாக வெளியேறி கிரான், சந்திவெளி, சித்தாண்டி போன்ற பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## 12 படையினர் பலி

09-07-88: முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள, புதுக்குடியிருப்பு பகுதியில் இரட்டை வாய்க்கால் என்னும் இடத்தில் பேருந்து வண்டி ஒன்றில் வந்த இந்தியப் படையினருக்கும், எமது வீரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் 4-இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். 3-பேர் காயமடைந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், முல்லைத்தீவு வீதியில் பரந்தனுக்கும், முரசுமோட்டைக்கும் இடையில் இந்தியப் படையினர், மீது எம்மவர்களால் ''கிளைமோர்'' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் 5-இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில், மூதூர் என்ற இடத்தில் கால்நடையாக வந்த இந்தியத் துருப்புகளின் மீது எமது கெரில்லா வீரர்கள் ''சிலிண்டர்'' தாக்குதல் மேற்கொண்டதில் 3 - இந்தியத் துருப்புகள் கொல்லப்பட்டனர்.

## தொடரும் அரச பயங்கரவாதம்

13-07-88: முல்லைத்தீவு மாவட்டம், மந்துவில என்ற இடத்தில் தேடுதல் வேட்டைக்காக சென்ற இந்தியப் படையினர் அங்குள்ள அப்பாவித் தமிழர்களின் வீடுகளைச் சூறையாடிவிட்டு பின்பு தீயிட்டு எரித்துள்ளனர். இவ்வீடுகளில் குடியிருந்த தமிழ் மக்கள் இருக்க இடமின்றிக் காடுகளில் அகதிகளாக, அனாதைகளாக அலைந்து திரிகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தனில், முல்லைத்தீவு வீதியில் விளா ஓடை என்ற இடத்திற்கு இனப்படுகொலை மேற்கொள்ள வந்த இந்தியப் படையினர்மீதான, எமது வீரர்களின் நேரடித் தாக்குதலில் ஒரு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டார். ஒருவர் படுகாயமடைந்தார்.

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேசத்திலுள்ள இறால்குடி இலுப்பைச்சேனை, உப்புவெளி, போன்ற இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் என்ற இடத்தில் உள்ள இராமநாதபுரம் மகாவித்தியாலத்திலும் இந்தியப் படையினர் புதிய முகாம்கள் அமைத்துள்ளனர்.

## கண்ணிவெடிக்கு 26 இந்தியப் படையினர் பலி

14-07-88: கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன்குளம் என்ற இடத்தில் 10-ம் கட்டையடியில் 4 இராணுவ வாகனங்களில் வந்து கொண்டிருந்த இந்தியப் படையினர் மீது எமது கெரில்லா விரர்கள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியதில் ஒரு ட்ரக் வண்டி 30 அடி உயரத்திற்கு தூக்கி எறியப்பட்டு சின்னாபின்னமாகியது. அந்த வண்டியில் வந்துகொண்டிருந்த 20 இந்தியப்படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டம் கொக்காவில் என்ற இடத்தில் பல வாகனங்களில் வந்து கொண்டிருந்த இந்தியப் படையினர்மீது எமது வீரர்கள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 6-இந்தியப் படை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர்.

இந்திய இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் எனக் கூறிக்கொள்ளப்படும் யாழ்ப்பாண மாவட்டம், சுன்னாகம் என்ற இடத்தில் உள்ள இந்திய இராணுவத் தளம் ஒன்றுமீது எமது வீரர்கள் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் பல இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். (4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது) பலர் காயமடைந்தனர்.

## மாணவி உட்பட 4 அப்பாவிகள் பலி

15-07-88; கிளிநொச்சி மாவட்டம், முரசு மோட்டை என்ற கிராமத்திற்குச் சென்ற இந்திய இராணுவம், செல்லும் வழிநெடுகிலும் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பாடசாலை மாணவி உட்பட 4-அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டம், பரந்தன் சந்தியில் காவலுக்கு நின்ற 4-இந்தியப் படையினர் மீது எமது வீரர்கள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டதில் 3-இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள, மாங்குளத்தை நோக்கி 75-ற்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் தேடியழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளச் சென்றுகொண்டிருந்த வேளையில் 10-ம் போர் என்ற இடத்தில் அவர்களை எதிர்கொண்ட எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். இம்மோதலில் 4-இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டம், கட்டைபறிச்சான் கட்டுக்கரைச் சேனை, சம்பூர் ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்த இந்தியப் படையினர் 4-பெண்கள் உட்பட 20 அப்பாவித் தமிழ் மக்களைக் கைது செய்து தமது முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இவர்களைப் பற்றிய விபரமெதுவும் பின்னர் கிடைக்கவில்லை.

## முஸ்லிம் மீனவர் படுகொலை இந்திய இராணுவம் வெறியாட்டம்

16-07-88: அம்பாறை மாவட்டத்திலுள்ள, 60-ம் கட்டை என்ற இடத்தில் ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சம்சுதீன் என்ற மீனவர் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே சமயம் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த ஜெயசீலன் என்ற அப்பாவித் தமிழ் மகனையும் இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

## லெப்ரினன்ட் காசிம் வீர மரணம்: ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

16-07-88: யாழ்ப்பாண மாவட்டம், சுழிபுரம் என்ற இடத்தில் இந்திய இராணுவ முகாமிற்கருகில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியப் படையினர் மீது எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். இம்மோதலில் 3-இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். சில இராணுவத் தளவாடங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. எமது தரப்பில் லெப்ரினன்ட் காசிம் வீரமரணமடைந்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள, கோமாரி இராணுவ முகாமிலிருந்து பொத்துவில் நோக்கிச்சென்றுகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் மீது 60-கட்டை என்ற இடத்தில் அவர்களை எதிர்கொண்ட எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். இம்மோதலில் 3-இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்திய இராணுவத்தினரிடமிருந்து 2-S. L R. ரக துப்பாக்கிகளும், 1-எஸ்.எம்.ஜீ. துப்பாக்கியும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டம், புலிபாய்ந்தகல் என்ற இடத்திலிருந்து மியான்குளம் என்ற இடத்திற்குச் சென்றுகொண்டிருந்த இந்திய இராணுவத்தினருடன் எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர். இம்மோதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் காயமடைந்தனர்.

## இந்திய இராணுவம் சித்திரவதை! அப்பாவி பலி

17-07-88: திருகோணமலை மாவட்டம் மூதூரிலுள்ள உப்புவெளி என்ற இடத்தில் இந்திய இராணுவத்தால் பல அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர் இச்சித்திரவதையின்போது இராகவன் என்னும் அப்பாவித் தமிழ்மகன் இந்திய இராணுவத்தால் அடித்துக் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பளை மல்லாகம்

www.tamilarangam.net



**வீதியில் சென்று கொண்டிருந்த மல்லாகம் முகாமைச் சேர்ந்த இந்தியப் படையினரின் ரோந்து வண்டிக்குள் எமது வீரர்கள் கைக்குண்டுகள் வீசினார்கள். சேத விபரம் தெரியவில்லை.**

மன்னார் மாவட்டத்தில், **ஆலங்குளம்** என்ற இடத்திலுள்ள இராணுவ முகாமிலிருந்து மடு என்ற இடத்தை நோக்கி கால்நடையாகச் சென்றுகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் மீது எமது கெரில்லா வீரர்கள் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியதில் 4-இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். (இதனையடுத்து ஆத்திரம் கொண்ட இந்தியப் படையினர் பொதுமக்கள் வாழும் குடியிருப்புகள் மீது புகுந்து அப்பாவித் தமிழ் மக்களை அடித்து சித்திரவதை செய்தார்கள்.)

## "ரெலோ" கோஷ்டியினால் படுகொலை: கண்ணிவெடிக்கு 14 படையினர் பலி

*19-07-88:* அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு என்ற இடத்தில் எமது ஆதரவாளரான **பொன்னம்பலம்** என்பவரை சமூக விரோத "ரெலோ" கோஷ்டியனர் சுட்டுக்கொன்று விட்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மாங்கேணி என்ற கிராமத்திற்கு தேடியழித்தல் நடவடிக்கைக்காக சென்று கொண்டிருந்த இந்திய இராணுவத்தினரின் ஒரு இராணுவ "ட்ரக்" வண்டியும், ஒரு "ஜீப்" வண்டியும் எமது கெரில்லா வீரர்கள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி முற்றாகச் சேதமடைந்தது. அதில் வந்துகொண்டிருந்த 11-இந்திய இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 4-பேர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டம், மூதூர் பகுதியில் கட்டைபறிச்சான் பாலம் என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த இந்தியப் படையினர் மீது எமது வீரர்கள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி என்ற இடத்தில் எமது வீரர்களால் ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறிக் கண்ணிவெடியொன்றில் அவ்வழியாக வந்த இந்தியப் படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

## இந்திய இராணுவத்தால் அப்பாவிகள் சித்திரவதை வீடுகள் தீக்கிரை

***20-07-88:* மன்னார்** மாவட்டம், தாழ்வுபாடு, துள்ளுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி, பேசாலை ஆகிய இடங்களை சுற்றிவளைத்த இந்திய இராணுவத்தினர் 75-க்கு மேற்பட்ட தமிழ்மக்களது வீடுகளைத் தீயிட்டு எரித்தனர். 300-க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கைது செய்து தமது முகாமுக்கு கொண்டு சென்று சித்திரவதைக்குள்ளாக்கினர்.

வவுனியா மாவட்டம், ஈச்சங்குளம் என்ற இடத்திலுள்ள பலசரக்குக் கடையை உடைத்து சூறையாடிய இந்தியப்படையினர், பின்னர் கடை உரிமையாளரின் மனைவி, அவரது 6-மாதக் கைக்குழந்தை உட்பட 17-அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களின் மேலதிக விபரம் எதுவும் தெரியவில்லை.

வவுனியா மாவட்டத்திலுள்ள, இலுப்பைக்குளம் என்ற இடத்தில் இந்திய இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். அவ்விடத்தில் குடியிருந்த தமிழ் மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிட்டு அவர்களைக் கொண்டே இம்முகாமை அமைத்துள்ளனர் இந்திய இராணுவத்தினர்.

## இவர்கள்தான் 'புலிகள்'

'புலிகளின் சிறப்பு அவர்களுடைய தலைமையின் பெரிய தகுதியும் - மக்களின் எண்ணங்களை அவர்கள் ஒத்திருப்பதும்தான். அவர்கள் தியாகத்தையும் அத்தோடு சேர்த்துக் கொள்ளலாம். புதுடில்லிக்கு **பிரபாகரன்** தலைவலியாகவே இருக்கிறார். அவருடைய வலிமைமிக்க இயக்கம் தமிழீழத்தில் இருக்கிறது. உலகிலுள்ள அவரது ஆதரவாளர்களின் பணத்தில் இயங்குகிறார் - அதனால் இந்தியாவின் 'ரசனை'களுக்கு ஆடாமல் சுதந்திரமாக நிமிர்ந்து நிற்கிறார்!

DEREK BROWN ('GUARDIAN' REPORTER)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 13-வது திருத்தச் சட்டம்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாவதற்கு நாம் எவ்வகையிலும் கட்சிக்காரராக அமைந்திருக்கவில்லை என்பது உலகறிந்த உண்மை. நிரந்தர நன்மைக்கும் உயிர் வாழ்வுக்கும் ஆன எந்த ஓர் பொறுப்பையும் நாம் எமது சார்பாக மக்களுக்கு கொடுக்கக்கூடிய பாதுகாப்பு உரிமை எமக்கு வழங்கப்படாத நிலையில் ஒப்பந்தத்தை தார்மீக மான அல்லது சட்டபூர்வமான முறையில் ஏற்றுக்கொள்ளுமாறு இரு அரசுகளும் எங்களை நிர்பந்திக்கின்றன என்பது எங்களால் விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. இவ் ஒப்பந்தம் உயிர் பெறவும், நிலைத்திருக்கவும் செய்யவேண்டிய சகல பொறுப்புக்களும் அதிகாரங்களும் சிங்கள அரசாங்கத்திடமே ஒட்டு மொத்தமாகவும் ஒருதலைப் பட்சமாகவும் கையளிக்கப்பட்டுள்ளன.

எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள இனவாதிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசின் சகல நிர்வாகப் பொறுப்புகளையும் தன்னகத்தே கொண்ட சிங்கள ஜனாதிபதி ஒருவரின் நடவடிக்கை ஒன்றின்மூலம் இச் சட்டத்தினால் விளையும் சகல அம்சங்களுக்கும், சமாதிகட்டுவதற்கு, வழி அமைக்கப்பட்டுள்ள அதேவேளையில் இந்திய அரசுக்கும் இது தொடர்பாக மேற்படி எதனையும் செய்ய வழியற்ற வகையில் இத் திருத்தம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் போராட்டம் ஓர் அரசியல் சாகசத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. பாகுபாடு காட்டப்படும் சட்ட ஆக்கங்கள், கல்வியில் காட்டப்பட்ட பாரபட்சம், மாற்றாந்தாய் மனப்பான்மை, தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தில் திட்டமிட்ட தனிச் சிங்கள குடியேற்றம், தமிழர்களுக்கு எதிராக பதவியில் உள்ள அரசாங்கங்களின் அனுசரணைகளுடன் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கர வாதச் செயல்கள் என்னும் உலகறிந்த காரணங்களே தமிழர்களின் போராட்டத்திற்கான தோற்றுவாயாக அமைந்திருந்தன.

இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஓர் புதிய சகாப்தத்தினை உருவாக்கவும், அவர்கள் சுயமரியாதையுடனும், பாதுகாப்புடனும் வாழ்ந்திடவும், பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தங்கள் எதிர் காலத்தினை நிர்ணயம் செய்திடவும் கருத்துக்கொண்டே இந்தப் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றிட இந்திய அரசு, இலங்கை அரசுடன் மேற்சொன்ன ஒப்பந்தத்தினைச் செய்து முடித்தது எனப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்திய மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஆற்றிய உரையும், தமிழ்நாட்டு மக்களுக்கு சென்னை மரீனா கடற்கரையில் ஆற்றிய உரையும், தமிழர்கள் தாங்கள் பூரண சுயநிர்ணய உரிமையினை அனுபவிப்பதற்கான காலம் கனிந்துள்ளது என்ற நம்பிக்கையினையும் எதிர்பார்ப்பினையும் தோற்றுவித்தது.

ஆகவே 13-வது திருத்தச் சட்டம், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் ஒவ்வொரு கருத்திற்கும், வாசகத்திற்கும் இந்தியப் பிரதமர் அளித்திருந்த வாக்குறுதிகளுக்கும், உத்தரவாதங்களுக்கும், உயிர் ஊட்டும் வகையில் அமைந்திருக்கவேண்டும் என்பதோடு ஒரு முழு தேசிய இன ஒழிப்புக்கு எதிராக இரத்தம் சிந்திய போராட்டம் ஒன்றை நிகழ்த்தியவர்களுக்கு நீதியான, நியாயமான தீர்வை அவர்கள் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படாதவாறு வழங்கப் பாரதப் பிரதமர் ஏற்றுக் கொண்டிருந்த முழு பொறுப்பினையும் கவனத்திற் கெடுத்துச் செய்து முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ் ஒப்பந்தத்தின் முதற் தோற்ற நடவடிக்கையாக, இலங்கை அரசு 13-ம் திருத்தச் சட்டத்தின் நகல் பிரதியினை இந்திய அரசுக்கு அனுப்பியது. அவர்கள் அது தொடர்பில் தமிழர் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து, எமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளித்திருக்கவேண்டும். ஆனால் இதனைச் செய்யத் தவறிய சிறீலங்கா அரசாங்கம் ஒருதலைப் பட்சமாக 13-ம் திருத்த சட்டத்தினைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினையே ஒரு கேலிக் கூத்தாக்கிவிட்டது.

13-ம் அரசியல் திருத்தச் சட்டம் சம்பந்தமான ஓர் மதிப்பீடு இலங்கைத்தமிழர்கள் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் மட்டும் அது எவ்வாறு இந்திய, இலங்கை ஒப்பந்தத்

www.tamilarangam.net



திற்கு முரணான வகையில் வேறுபடுகின்றது என்பதனைப் புலப்படுத்தும்.

## (1) மொழி

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் 2-18 வாசகங்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டும் இலங்கையில் உத்தியோகபூர்வ மொழிகளாக அமைதல் வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் 13-ம் திருத்தச் சட்டம் ஆங்கிலம் ஓர் இணைப்பு மொழியாகவே இருக்கும் என்பதையும் தமிழ் உத்தியோகபூர்வ மொழியாக உபயோகம் பெறுதல் பாராளுமன்ற சட்ட ஆக்க நிகழ்வு ஒன்றிலேயே தங்கியிருக்கும் என்பதையும் உறுதி செய்வதோடு அரசியல் அமைப்பு ரீதியாக சிங்கள மொழி மட்டுமே உத்தியோக பூர்வ மொழி என்ற நிலையினைத் தொடர்ந்து தக்கவைத்தும் உள்ளது. இந்நடவடிக்கை இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரண்பட்ட ஒன்றாகும்.

## (2) ஆளுநர்

மாகாணம் ஒன்றின் சகல நிறைவேற்று அதிகாரங்களும் ஆளுநர் வசமே ஒப்படைக்கப்பட்டிருப்பதோடு அவர் நேரிடையாகவோ, அன்றி மந்திரி சபை மூலமாகவோ அன்றி தன் கீழ்ப்பட்ட அதிகாரிகள் மூலமாகவோ உபயோகப்படுத்துவதற்கு 13-ஆம் திருத்த சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் ஜனாதிபதி ஒருவரே மாகாணம் ஒன்றின் ஆளுநரை நேரிடையாக நியமிப்பார். மாகாண முதன் மந்திரியை ஆளுநர் நியமனம் தொடர்பாக ஜனாதிபதி கலந்தாலோசனை செய்யவேண்டும் என்பது கிடையாது. 13 ஆம் அரசியல் திருத்த சட்டத்தின் கீழான ஆளுநர் பதவி என்பது தந்திரமான முறையில் மாகாணங்களுக்கான அதிகாரங்களை மத்திய அரசு கபளீகரம் செய்யும் விதத்தில் உருவாக்கப்பட்ட கிரேக்க இதிகாசகால றோஜன் குதிரைக்கு ஒப்பான ஓர் பதவியாகும்.


13-வது திருத்தச் சட்டம் மாகாண ஆளுநருக்கு கட்டுப்பாடற்ற தற்றுணிவு அதிகாரத்தினை வழங்கி உள்ளது. இவ் அதிகாரங்கள் மிகவும் அபாயகரமான விபரீத அரசியல் விளைவுகளை உருவாக்கக்கூடியது. இத்தகைய அதிகாரங்கள் எதுவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆளுநருக்கு கிடையாது என்பதும் குறிப்பிடக் கூடிய ஓர் அம்சம் ஆகும். பிரிவு 154F (2) ஆளுநரது தற்றுணிவு அதிகார உபயோகம் ஜனாதிபதியின் பணிப்புரை மீதே நடத்தப்படல் வேண்டும் என்று கூறுகின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநர் ஒருவரது அதிகாரங்கள், அரசியல் அமைப்பு ரீதியாக வரையறை செய்யப்பட்டும் அடையாளமிடப்பட்டும் காட்டப்பட்டிருப்பது போல் 13-ஆம் அரசியல் அமைப்பு திருத்தம் ஆளுநர் ஒருவரது தற்றுணிவு அதிகாரங்களை வரையறை செய்யவோ அடையாளம் காட்டவோ இல்லை. பிரிவு 154F (2) அளித்துள்ள அதிகாரங்கள் இவ்வாறு கருதவைக்கின்றன. மேலும் தற்றுணிவு அதிகாரத்தின்கீழ் ஆற்றப்படும் எந்த ஓர் செயலினதும் விளைவுபற்றி நீதிமன்றத்தில் வாதிடும் உரிமை கூட 13-வது திருத்த சட்டத்தில் மறுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சிங்களவர் ஒருவர் மட்டுமே உருவாகக்கூடிய நிலை உள்ளதால் அத்தகைய ஜனாதிபதி ஒருவர் தனது கடமைகளை, அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் பாரபட்சம் அற்ற நடுநிலையில் நின்று ஒழுகுவார் என நாம் எதிர் பார்க்க முடியாது. 13-வது திருத்தச் சட்டம் அளித்துள்ள ஆளுநருக்கான அதிகாரங்களும், ஆளுநர் தெரிவில் ஜனாதிபதிக்கு அளித்துள்ள அதிகாரங்களும், ஜனாதிபதியின் அதிகாரங்களின் ஓர் அடையாள முத்திரையாகவே ஆளுநர் பதவியினை தோற்றுவித்துள்ளன. இதன் பிரகாரம் மாகாணத்தின் சகல அதிகாரங்களையும் தனது விருப்பத்திற்கு ஏற்பப் பெற்றுக் கொள்ள ஜனாதிபதிக்கு வழி ஒன்று காட்டப்பட்டுள்ளதையும் உணர முடிகின்றது. பிரிவு 154 E (2)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாண முதன் மந்திரி ஒருவரதும் அவரது மந்திரி சபையினதும் செயல்பாடுகளை வெறிதாக்கும் தன்மைகள் கொண்டனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய பிரிவுகளது அறிமுகம் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவல் என்ற பதத்திற்கு அர்த்தம் எதனையும் கொள்ள முடியாது செய்துள்ளது.

## (3) சட்டமாக்கும் அதிகாரங்கள்

மாகாண சபைகளுக்கு மாகாண சபைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள விடயங்கள் தொடர்பில் சட்டம் ஆக்கும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தபோதும் பிரிவுகள் 154G (2) 154 G (3) என்பன பாராளுமன்றம் ஓர் சில வழிமுறைகளைப் பின்பற்றி மேற்சொல்லப்பட்ட விடயங்களில் மாற்றங்கள், திருத்தங்கள், அதிகாரங்கள் செய்வதற்கு இடமளிக்கின்றன. இத்தகைய மாற்றங்கள், மாகாண சபைகளின் பெரும்பான்மை ஒப்புதலைப் பெறுவதன் மூலமும் தலறன் பாராளுமன்றத்தன்


www.tamilarangam.net



சிங்களவர்கள் கொண்டிருந்த கசப்புணர்வை துல்லியமாக எடுத்துக் காட்டியது.

13-வது திருத்தச் சட்டம் காணி தொடர்பில் கைக்கொண்ட அதே தந்திரமான [illegible]யினையே கல்வி [illegible] பின்பற்றியுள்ளது. பட்டியல் 1 ([illegible] பட்டியல்) கல்வி, கல்வி சேவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் என்பன மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்டதாக தெரிவித்துவிட்டு அனுபந்தம் (iii) அறிமுகம் மூலம் பெருமளவு அதிகாரங்களும் பொறுப்புக்களும், மாகாணசபையிடம் இருந்து பிரிக்கப்பட்டு மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் உரிமை பரிசீலனை செய்யும் உரிமை, உயர்தர கல்விகளுக்கு அதிகாரிகளை நியமிக்கும் உரிமை மாகாண கல்வி சேவைக் குழு என்பனவற்றினை நியமிக்கும உரிமை போன்றன மத்திய அரசின் வசமே விடப்பட்டுள்ளன. இது தவிர உயர் கல்வி விடயங்கள். "இரு சாரருக்கும் பொதுவான (Coneument List) பட்டியலில் அடங்கியுள்ளன. ஒட்டுமொத்தமாக தமிழர்கள் கல்வி மேம்பாட்டில் தமது மக்களின் திறமைக்கும் தேவைக்கும் ஏற்ற விதத்தில் உருவாக்க முற்படும் ஓர் கடமையினை மழுங்கடிக்கச் செய்யும் முயற்சியே அனுபந்தம் (iii) அறிமுகமாகும்.



ஒப்பந்தத்தின் ஓராண்டு நினைவு விழா...

www.tamilarangam.net



### (7) சட்டமும் ஒழுங்கும்

தமிழ் மக்களது உயிர்களுக்கு பாதுகாப்பு என்னும் விடயம் மிகவும் உன்னிப்பாக கவனத்திற் கெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சிறீலங்கா அரசின் போலீஸ் படையும், ஆயுதப் படைகளும் தமிழர்களுக்கு எவ்வித பாதுகாப்பினையும் வழங்கவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. அது மட்டுமன்றி அவர்கள் காலம் காலமாக தமிழர்களை அடக்கி ஒடுக்கும் செயலிலேயே முன் நின்றனர்.

இணைப்பு பிரகாரம் (c) உள்ளூர் சட்ட ஒழுங்கும் பராமரிப்பும் மாகாணசபையிடம் கொடுக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கிறது. 13-ம் திருத்தச் சட்டம் இங்கும் தனது வழமையான இயல்புக்கிணங்க மாகாண சபையின் கைகளில் சட்டம், ஒழுங்கு, போலீஸ்மீதான அதிகாரம் என்பனவற்றை அளித்துவிட்டு அனுபந்தம் I அறிமுகம் செய்து மேற் சொன்ன அதிகாரங்கள் சகலதையும் இல்லாதொழித்த ஓர் நிலையினையே உருவாக்கியுள்ளது. அனுபந்தம் Iன் ஊடாக போலீஸ் மா அதிபர், தேசிய போலீஸ் ஆணைக்குழு என்பவர்களுக்கு அளித்துள்ள மட்டற்ற அதிகாரங்களும் அவசரகால நிலைப் பிரகடனத்தின்போது துருப்புக்களை, மாநிலத்தில் நிலை கொள்ளவைக்கக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களும், சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதில் மாகாண சபைகளுக்குள்ளந்த வித அதிகாரத்தினையும் அளிப்பதனைத் தடுத்துவிட்டன.

### (8) நீதி சேவை

13-ம் திருத்தச்சட்டம் தமிழ்ப் பகுதிகளில், தமிழ் மக்களின் நீதித்துறை குறைபாடுகளைத் தமது பகுதிக்குள்ளேயே தீர்வு காணும் விதத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றினைத் தோற்றுவிக்கும் ஏற்பாடு எதையுமே தன்னிடத்தில் கொண்டிருக்கவில்லை. மாவட்ட நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து மேன்முறையீடு செய்யப்படும் குற்றவியல், குடியியல் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்க மேன் முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்படாதது நீதித்துறையில் அதிகாரப்பரவலை பூரணத்துவம் அற்றதாக்கின்றது.

அத்துடன் மத்திய அரசு, மாகாண அரசு சம்பந்தமாக எதிர்காலத்தில் எழ உள்ள பிணக்குகள் மற்றும் இரு மாகாணங்களுக்குள் எழ உள்ள பிணக்குகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கோ, தீர்ப்பு வழங்குவதற்கோ, உயர் நீதிமன்றத்திற்கு எந்தவித மான பொறுப்பையோ அதிகாரத்தினையோ இச்சட்டத் திருத்தம் வழங்கவில்லை.

### (9) மத்திய, மாகாண அதிகாரங்களும் உறவு நிலையும்

a **திருத்தங்களும் சட்டம் ஆக்கும் அதிகாரங்களும்.**

மாகாண பட்டியலில் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சட்டங்களை உருவாக்க மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சில விடயங்கள் தொடர்பில் தமிழர் நலன்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் தலையீடுகள் மேற்கொள்ளப்படுமாயின் நிலைமை சிக்கலானதாகவே அமையும். இந்நிலைமை தொடருமாயின் தமிழ் மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் காலப் போக்கில் படிப்படியாக குறைந்து செல்லவே வழிவகுக்கும். பிரிவுகள் 154G (2) - 154 G (3) என்பன பாராளுமன்றத்திற்கு விசேடப் பெரும்பான்மை பெறுவதன் மூலம் மாகாணப் பட்டியலில் உள்ள விடயங்களை மாற்ற, திருத்த அதிகாரம் அளிக்கின்றது. இவ் விசேட பெரும்பான்மை என்பது தமிழர்கள் நலன்களுக்கு விரோதமாக உள்ள வேளையில் மட்டும் அவ்விசயம் தொடர்பில் மட்டும் பெறுவது. எந்த ஓர் சிங்கள ஆட்சியாளருக்கும் இது கடினமான ஓர் காரியம் அல்ல. ஏனெனில் கடந்த கால வரலாற்றுப் பின்னணியினை ஆராய்ந்தால் சகல சிங்கள சிறுபான்மை அரசாங்கங்கள் கூட தமிழர் விரோத சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற எவ்வித சிரமமும் இன்றி 2/3 பங்கு அங்கத்தவர் சம்மதத்தினைப் பெற்றிருக்கின்றன.

(தொடரும்)

**''தமிழீழ மக்களின் பிரச்சனைகளுக்குத் 'தனித் தமிழ் ஈழ அரசு' ஒன்றே தீர்வாகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தமிழீழத்தை அடைய நான் தொடர்ந்து போராடுவேன் என்பதை எந்த ஐயத்துக்கும் இடமின்றி நான் இவ்வேளை உங்களுக்கு அழுத்தமாக சொல்லிக்கொள்கிறேன்.''**

**தலைவர் வே. பிரபாகரன்**

**(4-8-87-இல் சுதுமலையில் பேசியது).**

www.tamilarangam.net

# ஓடிப்போனவன்....

ஃபிரெஞ்சுக் கவிஞர்
**போரிஸ் வியான்**
தமிழில்: வெ. ஸ்ரீராம்.



குடியரசுத் தலைவர் அவர்களே
இதோ உங்களுக்கு ஒரு கடிதம்
நீங்கள் ஒருவேளை இதைப்
படிக்கலாம்
உங்களுக்கு நேரம் இருந்தால்.

இப்போதுதான் கிடைத்தன எனக்கு
ராணுவத்திலிருந்து உத்தரவுக்
காகிதங்கள்
புதன் பொழுது சாய்வதற்குள்
போருக்குப் புறப்படச் சொல்லி.

குடியரசுத் தலைவர் அவர்களே
நான் அப்படிச் செய்யப்
போவதில்லை.

இந்தப் பூமியில் நான் பிறந்தது
ஒன்றுமறியா மக்களைக்
கொல்வதற்கல்ல.

உங்களுக்குக் கோபமூட்ட
வேண்டுமென்றல்ல.
ஆனாலும் நான் சொல்லத்தான்
வேண்டும்...
என் முடிவு எடுக்கப்பட்டுவிட்டது.
நான் ஓடிப் போகப் போகிறேன்.

பிறந்தது முதல் இன்றுவரை
பார்த்துவிட்டேன் எல்லாம்.
தந்தையின் சாவு சகோதரர்களின்
பிரிவு
என் குழந்தைகளின் அழுகை.

இன்று கல்லறைக்குள்ளிருக்கும்
என் அன்னை
எவ்வளவு துன்புற்றிருக்கிறாள்.
இன்று அவளுக்குத்
துச்சமாகிவிட்டன
குண்டுகளும் கவிதை வரிகளும்.

நான் கைதியாக இருந்தபோது
என்னிடமிருந்து பறிக்கப்பட்டன
என் மனைவி என் ஆத்மா
இனிய என் கடந்தகாலம்
முழுவதும்.

நாளை அதிகாலையில்
இறந்த ஆண்டுகளின் முகத்தில்
அறைந்து சாற்றுவேன் என்
கதவை.
புறப்பட்டுச் செல்வேன் என்
பாதையில்.

பிச்சையெடுத்து வாழ்வேன்
பிரான்ஸ் நாட்டு வீதிகளில்
வடமேற்கிலிருந்து
தென்திசை வரை
மக்களிடம் எடுத்துச் சொல்வேன்:-

"மறுங்கள் அடிபணிய
மறுங்கள் போர்புரியப்
போகாதீர்கள் போருக்குப்
புறப்பட மறுங்கள்.

நாட்டுக்கு இரத்தம்
தேவையென்றால்
நீங்கள் போய்த் தாருங்கள்."
தெய்வ தூதராயிற்றே நீங்கள்

குடியரசுத் தலைவர் அவர்களே.
என்னைப் பின்தொடர்வதானால்
சேவகர்களிடம் சொல்லிவிடுங்கள்
ஆயுதமிருக்காது என்னிடம்
தைரியமாகச் சுடலாம்.

நன்றி: இனி

www.tamilarangam.net

# மலையகத் தமிழர் எதிர்காலம் - ஒரு பகுப்பாய்வு

□

இலங்கைக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டு 39 ஆண்டுகள் ஆகியும் இன்றும் கூட 20-ம் நூற்றாண்டின் 'நவீன அடிமைகள்' என வர்ணிக்கப்படும், மலையகத் தமிழ் மக்களைப்பற்றிய ஒரு சமூகப் பகுப்பாய்வை மேற்கொள்வது, நாளைய தமிழீழத்தில் மலையக மக்கள்பற்றிய பிரச்சனைகளுக்குச் சரியானதொரு தீர்வை முன்வைப்பதற்கு அவசியமானதாகும். இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தெளிவாக விளங்கிக்கொண்டால் மாத்திரமே ஒரு முழுமையான தீர்வைப்பற்றி விவாதிக்கலாம்.

அமெரிக்காவின் பண்ணைகளில் அடிமைகளாக உழன்ற நீக்ரோ மக்களின் ஆரம்ப வாழ்க்கையும், மலையகத் தமிழ் மக்களின் 150 ஆண்டுகால வரலாறும் ஒன்றுதான். இயந்திரங்கள் செய்திருக்க வேண்டிய பணிகளை இயந்திரமாக்கப்பட்ட இம்மனிதர்கள் செய்தனர். மலைப்பிரதேசத்தின் அட்டைகள் மாத்திரமல்லாது ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவ அரசகட்டமைப்பும் சேர்ந்தே இம்மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வருகின்றன. தரகு முதலாளிகளின் ஐ. தே. க அரசும் சுதந்திரக் கட்சி அரசும் இந்த ஒரு விடயத்தில் மாத்திரம் பாரபட்சம் காட்டாது [illegible]றுவனமாக்கப்பட்ட கி[illegible]மைப்பு[illegible]ன் ஊடா[illegible]ட்டிப்பாட்டுக் [illegible] இவர்களைச் சு[illegible] வருகின்றன.

ஏனைய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் ஈவு இரக்கமின்றிச் சுரண்டப்பட்டாலும் அந்நாட்டின் பிரஜைகள் என்ற அந்தஸ்த்தும் கண்துடைப்பு ஜனநாயக உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும். ஆனால் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த உடனேயே பிரஜாவுரிமையும் ஏனைய குடியுரிமைகளும் இம்மக்களிடமிருந்து பறிக்கப்பட்டன. மலையக மக்கள் ஏற்கனவே முகம்கொடுத்து வந்த பிரச்சனைகளுடன் இப்புதிய பிரச்சனைகளையும் இணைத்துவிட்டவர் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவே. இவ்வாறு மலையக மக்களின் உரிமைகளைப் பறித்ததன்மூலம் இனப்பிரச்சனையை இலங்கையில் அரங்கேற்றியவர் இப்பெருமானாரே. தமிழ்த்தேசிய இனத்தின் ஒரு அங்கமான மலையக மக்கள்மீது உழைப்புச் சுரண்டலையும் ஏனைய அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விடுவதில் சிறிமாவோ அம்மையாரின் அரசாங்கமும் பின் நிற்கவில்லை. இவரது அரசாங்கத்தின்போது தோட்டங்களைத் தேசியமயமாக்குவது என்ற போர்வையில் மலையகப் பெருந் தோட்டங்களிலிருந்து தமிழ்த் தொழிலாளர்கள் கும்பல் கும்பலாக வெளியேற்றப்பட்டு சிங்களவர் குடியமர்த்தப்பட்டனர். அதுவரை அரைவயிற்றுக் கஞ்சியாவது குடித்துவந்த தோட்டத் தொழிலாளர்களில் பலர் பின்னர் பஞ்சப் பராரிகளாகி கண்டி போன்ற நகர்ப்புறங்களை நாடி பிச்சையெடுத்து உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். பலர் பட்டினிச்சாவை எதிர்நோக்கினர். இம்மக்களை ஏமாற்றி இவர்களது வாக்குகளைக் கணிசமாகப் பெற்றுப் பதவிக்கு வந்த ஜே. ஆர். அரசு இன்றுவரை இம்மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்காது தட்டிக்கழித்து வருகின்றது.

ஸ்தாபன ரீதியாகப் பலம் வாய்ந்தவர்களாக இருந்தும் மலையகத் தமிழ்த் தொழிலாளிகள் வஞ்சிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும். இம்மக்களின் பிரச்சனைகள், அவற்றிற்கான தீர்வு என்பவற்றை ஆராய்வதற்கு முன் இம்மக்களை அவர்களின் வாழ்விடத் தெரிவின் அடிப்படையில் நாம் பகுக்க வேண்டியுள்ளது. அதாவது :-

I. மலையகத்திலேயே வாழ விரும்பும் தமிழ்மக்கள்.

II. தமிழ்ப் பிரதேசத்தில் வசிக்க விரும்பும், வசித்துவரும் மலையகத் தமிழ் மக்கள். இவ்விரு அடிப்படையில் வாழ முற்படும் மலையக மக்களின் பிரச்சனைகளும் தீர்வுகளும் முழுமையாக ஒத்திருக்காது. எனவே இவ்விரு அம்சங்களை நாம் தனித்தனியே நோக்குவதே பொருத்தமாக இருக்கும்.

முதலில் மலையகத்திலேயே வாழ விரும்பும் தமிழ் மக்களின் பிரச்சனைகளைப்பார்ப்போம். இதில் முதலாவதாக பிரஜாவுரிமை அற்[illegible] படும் இன்னல்கள் [illegible] பல சந்தர்ப்பங்களில் [illegible]த்துக் காட்டப்பட்டு [illegible]ளது. இதனால் அன்றா[illegible]பின் பல கட்டங்க[illegible]க்கடிகளை இம்மக்[illegible]நோக்கு

www.tamilarangam.net



கின்றனர். பாட்டன், முப்பாட்டன் காலந்தொட்டு இந்த மண்ணிலேயே வசித்து இந்த மண்ணையும் நாட்டையும் வளமாக்கி வருபவர்களுக்கு பிரஜாவுரிமை மறுக்கப்படுவதானது உலகின் வேறெந்த மூலையிலும் இடம்பெறாத தனி நிகழ்வாகும்.

இதேவேளையில் பணமுதலைகளுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஒரே சமயத்தில் பிரஜாவுரிமை (இரட்டை பிரஜாவுரிமை) வைத்திருக்க அனுமதியளிக்கும் சட்டம் ஒன்றை அண்மையில் சிறீலங்கா அரசு நிறைவேற்றியுள்ளது. இலங்கையின் நன்மை கருதி இக்கனவான்களுக்கு இவ்வுரிமை அளிக்கப்படுவதாக சிறீலங்கா அரசு கூறிக்கொள்கின்றது. ஆனால் இன்றுவரை இலங்கையின் அந்நியச் செலாவணியில் பெரும்பகுதியை ஈட்டித் தந்து உருகுலைந்து போகும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு, நாடற்றோர் என முத்திரை குத்தி பிரஜாவுரிமையை மறுப்பது எவ்வாறு நியாயமானதாகும்?

நாடற்றவர்களாக உழல வேண்டிய நிலையில் இன்றும் கூடப் பலர் உள்ளனர். இது தொடர்பாக ஏற்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் 7 வருடங்களுக்கு முன்பே காலாவதியாகி விட்டது. ஆகவே இந்தியப் பிரஜாவுரிமை மீளப் பரிசீலனை செய்யப்பட வேண்டும். ராமேஸ்வரம்— தலைமன்னார் கப்பல் சேவை நிறுத்தப்பட்ட இவ் ஐந்து வருடகால இடைவெளியில் பெரும்பாலான இந்தியக் கடவுச்சீட்டு பெற்றவர்களின் வயோதிபக் குடும்பத் தலைவர்கள் மரணமடைந்து விட்டதனால் அனாதைகளாக்கப்பட்ட, விதவைகளாக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் இந்தியாவிற்கு சென்று புதிய நிலைமைகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் இலங்கையிலேயே வாழ விரும்புகின்றனர். இவ்வாறு குடும்பத்தின் மிக நெருங்கிய உறவினர்கள் இலங்கைப் பிரஜைகள் ஆகியும் இலங்கைப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்தோராகியும் உள்ளனர். இதனால் பலர் தாங்களும் இங்கேயே வசிக்க விரும்புகின்றனர். பல குடும்பங்களில் இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்ற இளையதினர் இலங்கைப் பிரஜைகளை மணந்துள்ளனர். இது போன்ற காரணங்களினாலும் மாறி வரும் சூழ்நிலைகளின் காரணமாகவும் மலையகத் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் இந்த மண்ணிலேயே இறுதி வரை வாழ விரும்புகின்றனர். நாகரீகமான எந்த ஒரு நாடும் இவ்வாறான பிரச்சனையில் மனிதாபிமானத்துடன் தீர்க்கமான ஒரு முடிவையே எடுத்திருக்கும். ஆனால் இன்றுவரை சிறீலங்கா அரசு இப்பிரச்சனையை நடைமுறைக்கு ஒவ்வாத விதத்திலேயே கையாளுகிறது. காலம் முடிந்துவிட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தி மலையக மக்களை மந்தைகளாகக் கப்பலேற்றுவதை அனுமதிக்க முடியாது. இவர்கள் எமது மக்கள் - இவர்கள் அனைவருக்கும் குடியுரிமை உட்பட ஏனைய மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு குடியுரிமை பறிக்கப்பட்டதனால் வாக்குரிமையைப் பெறத் தகுதியுடைய மலையக இளைஞர்களின் பெயர்களைக்கூட, வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு சிறீலங்கா அரசின் அதிகாரிகள் தொடர்ந்து தடங்கல் கொடுத்து வருகின்றனர். இவர்களில் பலரின் விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் மீண்டும் வழங்கப்பட்டு இவர்களும் தமது ஜனநாயகக் கடமைகளை முழுமையாக ஆற்றுவதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

மலையகமக்கள் கடின உழைப்பிற்குத் தயங்கியதே இல்லை. காடுகளையும் மேடுகளையும் தமது அயராத உழைப்பினால் திருத்தி அமைத்த இம்மக்களுக்கு அவர்களது உழைப்பிற்கேற்ற ஊதியம் எந்தக் காலத்திலும் வழங்கப்படவில்லை. தனியார் துறையினால் மாத்திரமின்றி அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களாலும் இவர்களது உழைப்பு சுரண்டப்பட்டது. இருப்பினும் அரசுத்துறையில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் தனியார் துறை சார்ந்த தொழிலாளர்களுக்குமிடையில் சம்பள விகிதத்தில் பெரும் வித்தியாசம் இருக்கிறது. அத்துடன் தனியார் துறை தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு போதிய தொழில் பாதுகாப்பு இல்லை. நிர்வாகிகள் நினைத்த மாத்திரத்தில் தொழிலாளிகளை வேலை நீக்கம் செய்ய முடிகின்றது. ஏனைய அரசுத் துறைத் தோட்டங்களில் வழங்கப்படும் சம்பள உயர்வைத் தட்டிக் கேட்கவும் இவர்களால் முடிவதில்லை. தனியார் துறைத் தோட்டத் தொழிலாளர்கள் அரசுத் துறைத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் உரிமைகளையாவது அனுபவிக்க வழி செய்ய வேண்டிய அதே வேளையில் தொழில் பாதுகாப்பும் வழங்க வேண்டியது அவசியமாகும்.

ஆண்களைவிடக் குறைந்த வேதனத்தையே வாங்குவதனால், உழைப்புச் சுரண்டலினால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் மலையகப் பெண்களேயாவர். இவர்கள் குழந்தைகளைப் பராமரித்து சமை

(தொடரும்)

www.tamilarangam.net



மாத்தையாவுடன் புலிகள்





www.tamilarangam.net

தலைவர் பிரபாகரனுடன் புலிகள்





